விசேஷ
விளம்பரத்திற்கு!

உ
சிவமயம்

இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈச னெந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமானது.

[புத்தகம் ௫௧] யாழ்ப்பாணம்:— விஷு ௵ ஐப்பசி ௴ ௧௪ ௳ (1941 அக்டோபர் 30 வியாழக்கிழமை) [இலக்கம் ௫௪]

விசேஷ
விளம்பரத்திற்கு!

தருமபுரம் ஆதீனம் ஸ்ரீமெய்கண்டான் சித்தாந்த மகாநாட்டுத் தலைவர்

சிவஸ்ரீ காசிவாசி ஈசானசிவாசாரியரவர்கள்

தலைமையுரை

(முற்றொடர்)

சிவநேயச் செல்வர்களே!

ஸ்தாபிபுலாக சுருக்கமாக இங்குக் கூறியது கொண்டு வேதங்களுக்கு வேற்றுச் சமயிகள் கூறிய உரைகளும் அவற்றின் மொழி பெயர்ப்புக்களும் வேத வாய்மைச் செம்பொருளைத் தெரிவொட்டாமல் மயக்கஞ் செய்வனவேயாமென்பதறியப்படும். ஆதலின், வேதப் பொருளைச் சிவாகம ஞானக்கண் கொண்டு உணர வேண்டுமென்பது தெளிவாம்.

இனி, வேதத்தின் மெய்ப் பொருள் இனிதாக விளங்கும்பொருட்டு அதன் பாடியம் போல அருளிச் செய்யப்பெற்ற சிவாகமங்கள் இருபத்தெட்டாம். அவற்றின் சாரங்களைத் தொகுத்தெடுத்து உபதேசிக்கப்பெற்ற உபாகமங்கள் இருநூற்றேழு உள்ளன; அம் மூலாகமங்கள் பலவற்றிற்கும், உபாகமங்கள் பலவற்றிற்கும் பேருரை வகுத்த ஆசிரியர்கள் ஸ்ரீ ராமகண்டர், ஸ்ரீ நாராயணகண்டர் முதலிய ஆதி சைவ குலசிகாமணிகளேயாவர்; இவர்கள் அருளிச்செய்த ஆகம உரைகளில் இப்போது கிடைக்கக்கூடியனவாயுள்ள மிருகேந்திரவிருத்தி, மதங்க விருத்தி பௌஷ்கரவிருத்தி முதலியன வெளிவாராதிருப்பதும், தமிழில் வாராதிருப்பதும் பெரிதும் வருந்தத் தக்கதே. சிவாகமங்கள் வெளிவாராதிருப்பது இப்போதுதான் என்பதில்லை, மெய்ப்பொருணாயனார்பால்,

"உங்கணாயகனார் முன்ன முரைத்த
வாகமநூன் மண்மேல்
எங்குமில் லாததொன்று கொடுவந்
தேன்"

என முத்தநாதன் கூறியதனாலும்,

"பேறெனக் கிதன்மே லுண்டோ
பிரானருள் செய்தளித்த
மாறிலாகமத்தை வாசித் தருள்செய
வேண்டும்"

என நாயனார் கூறிய ஆர்வமொழியாலும் நாம் ஆறுதலடைவோமாக.

மிருகேந்திர விருத்தியில் ஆசிரியர் நாராயணகண்டர் தாம் உரை செய்ததற்குக் காரணங்கூறும் வழி,

"உபர்யுபர்யேவ க்ருதாநி கைச்சின் மதாந்தராணாம் நிபந்தநாநி! கோத்பின்னமுத்ரம த்வித மதயாவத் தன்மாத் குருர்மா மிதமன்வ சாதன:!! பிறமதங்களின் நிபந்தங்கள் சிலரால் மேன்மேலும் செய்யப் பட்டுள்ளன, இந்த (மிருகேந்திராகம) நூல் இதுகாறும் இடப்பட்ட முத்திரை திறக்கப்படவில்லை. ஆதலால், எமது குரவர் இதற்கு உரை செய்யும்படி கட்டளையிட்டார் என்று கூறுவதும்; ஸ்ரீ உமாபதிசிவாசாரியர் பௌஷ்கரவிருத்தியில், "உத்தேசமாக எடுத்துக்கொண்ட ஆறு பதார்த்தங்களுள் காரகபதார்த்தம் பரீக்ஷிக்கப்படாமைக்குச் சமாதானம் கூறி முடிவில், இப்படலம் எங்கேனும் கிடைக்குமாயின் இச் சங்கைக்கு இடமில்லை என்று கூறுவதும் சிந்திக்கத் தக்கன.

இனிச்சிவாகமங்களுடைய தோற்றம் பற்றியும் அதனைச் சிவபெருமான் ஈசானன்முதலாயுள்ள தேவர்கட்கு அருளிச் செய்த முறைபற்றியும் சிவாகமங் கூறுவதைத் திருமுறைகளும்,

"அண்டர் தமக் காகமநூன் மொழியும் ஆதியை"

என்பது முதலிய திருப்பாட்டுக்களால் உபதேசிக்கின்றன; நமது உமாபதி சிவனாரும் பௌஷ்கர விருத்தியில் சிவாகமவரலாறு சுருக்கி எழுதியதை இங்குத்தருதல் நலந்தரும்; அது வருமாறு:-

"மலர்தலையுலகின்கண் மும்மலக் களான் மறைப்புண்ட அறிவும் தொழிலு முடைமையாற் கடப்பதற்கரிய பிறவிப் பெருங்கடலுள் விழுந்தி, அதனைக் கடத்தற்குமாறறியாத அனந்தவுயிர்களையும் உய்யக் கொள்ளும்பொருட்டுப் பேரருள் நிறைந்த மூவிரு குணத்த முதல்வனாய பரமசிவன் காமிகமுதல் வாதுளமிறுதியான அருணூல்களை நாத முதலிய வடிவினவாக அருளிச் செய்தான்.

பின்னர், அம் முதல்வன் சதாசிவ வடிவினனாகியும் இன்று நாத முதலிய வடிவினவாகி வந்த அவ்வாகமங்களையே எண்ணிறந்த செய்யுள் வடிவாகப் பகுத்துப் பிரணவர் முதலிய சிவன்கள் பதின்மருக்கும் அநாதிருத்திரர் முதலிய உருத்திரர் பதினெண்மருக்கும் காமிக முதலிய தொகுதி முறையானே உபதேசித் தருளினன். இதனைத் தந்திராவதார படலத்தில் விரித்துக்காட்டுவாம்.

இனி அவ்வவ் விடங்களின் தம முறையானே மாமேரு சிகரத்தை அடைந்த அவ்வாகமங் கடலின் அந்த சாரமாக எடுத்து மந்தவுணர்வுடையோர்க் கருளுதற் பொருட்டு நான்கு பாதங்களுடைய பௌஷ்கரமெனப் பெயரிய ஆகமத்தை அறிவுறுத்தருளிய சீகண்ட முதல்வர்பால் சரியை கிரியா (யோக) பாதங்களைக்கேட்ட சனற்குமாரமுனிவர் முதலாயினோர் பதி முதலிய ஆறு பொருள்களையுந் தெரிந்துணர்தற்கும் ஞானபாதத்தைக் கேட்குங் காதலுடையராய அம் முதல்வன் றிருவடியே மங்கலமாகக் கருதி அப் பெருமானது திருமுக நோக்கம் பெற்றுத் தனித்தனி முன்னுற வினவுகின்றனர்" என்பதாம்.

இங்ஙனங்கூறிய சிவாகமங்களின் சாரப்பதங்களுள் ஞானபாதத்துத் தும் பொருள்களை ஆராய்ந்து நிர்ணயம் செய்வதற்கு எழுந்தது சிவஞானபோதமென்பது கைலாய பரம்பரைச் சந்தான குரமாபின் வந்த ஆசாரியர்கள் வலியுறுத்த அருளிய உண்மையாகும். சிவஞான போதம் என்ற பெயரும் இப் பொருள் தருவதென்பது திராவிடபாடியகாரர் முதலிய பேராசிரியர்கள் காட்டியவாறுபற்றி யுணரப்படும். அஃதாவது:— சிவஞானம் இரண்டு வகைப்படும். அது, சிவஸய மம வேதா யா சக்திர் ஞானத்மிகாமலா ஸைவஜ்ஞான மிதிப்ரோக்தம் சாப் தந்தந்த்ரமாபகம்."

இதன்பொருள்:— "உயர்ஞான மிரண்டாம் மாறுமல மகல அகாத மன்னுபோதத் திருவருளொன்றேனையது தெளியவோதுஞ் சிவாகமமென் றலகறியச் செப்பு நூலே" என எமது ஸ்ரீமத் உமாபதிசிவம் விளக்கியருளியபடி, திருவருள் ஞானமொன்று; மற்றொன்று அதனை அனுமானஞ் செய்துணர்தற்கும் சிவாகமமாம். சிவாகமம்பற்றி அனுமானஞ் செய்து திருவருண்ஞானத்தை யுணருமாறு, எமது சந்தான அசிரிய குருமூர்த்திகளாகிய ஸ்ரீமத்அருணந்திசிவம் "ஆரியமாம் அறம்பொருளோ டின்பம்வீ டெல்லாம் அறைந் துயிர்கட்கு அறிவு செயல் அளிப்பதுநூல் அந்நூல், கூறியவாய் உள்ளவர்கள் ஓதவோதக் கொண்டுவாலமுன்னே குற்றமின்றிச், சிரியவே சறிவுடையோரா செப்பவேண்டும்" என அருளிய வாற்றான் அறியப்படும்.

திருவருள்ஞானத்தை யுணர்த்துவது சிவாகமங்களெல்லாவற்றிற்கும் உரியதேயாம். ஆதலின், இங்குச் சிவஞானத்தைப் போதிப்பதென்பது, சிவாகமங்களின்பொருள்களை முரணறுத்து நிர்ணயிப்பது என்பதாம். இது சிவஞானபாடியத்துள் காண்க.

சிவாகமங்கள் அனைத்தினுங் கூறப் படும் பொருள்களை முழுதுணர்ந்து முரணறுத்தலைத்தலைவனேயோரால்

தொடர்ச்சி 4ம் பக்கம்)

காங்கிரஸ்கோரிக்கைக்கு அரசாங்கம் இணங்கினுல்தான்-

கொள்கையில் மாறுதல்

தலைவர்களின் முடிவு

பம்பாய் அக் 24—

வார்தாவில் காந்திஜியும், தலைவர்களும் கலந்து பேசுவது சம்பந்தமாக இங்கு சில தகவல்கள் எட்டிவருகின்றன. மூன்று நாள் விவாதத்துக்குப் பிறகு பம்பாயில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் வகுக்கப்பட்ட காங்கிரஸ் கொள்கையே மேலும் அனுஷ்டிக்கப்படுமென்று தெரிகிறது. இப்போதைய வேலைத் திட்டத்தில் மாறுதல் செய்ய எவ்வித அவசியமுமில்லையென்று தலைவர்கள் அபிப்பிராயப் படுகின்றனர்.

ஒரு விஷயத்தில் தெளிவு ஏற்பட்டிருக்கிறது. அதாவது இப்போதைய நெருக்கடிக்கு அரசாங்கமே பொறுப்பாளி என்றும் உண்மையில் அதிகாரத்தை இந்தியர் வசம் மாற்றினுல் யுத்தத்தில் ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாகக் காங்கிரஸ் அறிவித்ததென்றும், ஆகவே காங்கிரஸ் கோரிக்கைக்கு அரசாங்கம் இணங்கினுல் தான் கொள்கை மாற்றப்படுமென்றும் கூறப்படுகிறது.

தலைவர்களின் முடிவு

ராஜாஜி ஸர்தார் படேல், ராஜன் பாபு பண்டித பந்த் இவர்கள் தனித் தனியாகவும் ஒன்று சேர்ந்தும் சென்ற மூன்று தினங்களில் காந்திஜியைக் கண்டு பேசினர். பல்வேறு விதமான அபிப்பிராயங்களும் வெளியிடப்பட்டன. இப்பொழுதுள்ள நிலைமையில் காந்திஜி வகுத்துள்ள தனிப்பட்டவர் ஸத்தியாக்ரஹ திட்டத்தை மாற்றுவதில் ஒரு பிரயோசனமும் ஏற்படாதென்றும் மாற்றுவதால் நாட்டின் நன்மைக்கு சிலவே உண்டாகுமென்றும் தலைவர்கள் முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது. எந்த விஷயங்களை ஆதாரமாகக்கொண்டு மேற்படி முடிவு காணப்பட்டதென்று தெரியவில்லை.

ஸ்ரீமதி. ஸரோஜினி

ஹைதராபாத் அக் 24—

ஸ்ரீமதி சரோஜினி தேவியின் குடும்பத்தில் ஒருவர் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருப்பதால் வார்தாவில் நடக்கும் சம்பாஷணையில் அவர் கலந்துகொள்ளவில்லை.

மீண்டும் தலைவர்கள் ஸத்தியாக்ரஹம்

பம்பாய், அக், 24—

இப்போது வார்தாவிலுள்ள தலைவர்கள் தங்கள் தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பியதும் மறுபடியும் ஸத்யாக்ரஹம் புரிவரென்று வார்தாவிலிருந்து இங்கு செய்திகிடைத்திருக்கிறது.

ஸர்தார் வல்லபாயும் தமது நோய் குணமானதும் ஸத்தியாக்ரஹம் செய்வாரென்று கூறப்படுகிறது.

யுத்த நிறுத்ததின ஏற்பாடுகள்

பொதுக் கொண்டாட்டங்கள் நடைபெறமாட்டா

யுத்தநிறுத்ததினம் ஞாபகார்த்தமாக ஞாயிற்றுக்கிழமை இசைசம்பந்தமாகப் பின்னரும் ஏற்பாடுகளுக்கு மன்னர்பிரான் அங்கீகாரமளித்துவிட்டதாகத் தேசாதிபதிக்குக் குடியேற்றநாட்டு மந்திரியிடமிருந்து தந்தி கிடைத்திருக்கிறது:-

நவம்பர் ௴ 11-ந் திகதி செவ்வாய்க்கிழமையன்று பொதுக்கூட்டங்களும் இரண்டுநிமிஷ மௌனமும் வழக்கம்போல் பிரார்த்தனையும் நடைபெறமாட்டா. ஆயின், வழக்கம்போலப் "பொப்பி" மலர்விற்பனை நடைபெறும்.

நவம்பர் ௴ 16-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை ஒரு ஞாபகார்த்த தினமாகவும் அர்ப்பணமாகவும் கொண்டாடப்படும்.

மகாயுத்தப் பழையவீரர்கள் சங்கத்தின் வேண்டுகோட்கிணங்க நவம்பர் ௴ 11-ந் திகதி காலை 11 மணிக்குக் கோட்டை செங். பீட்டர் தேவலயத்தில் நடைபெறும் பிரார்த்தனையிற் கலந்துகொண்டு ஒரு பூ வளையத்தைச் சமர்ப்பிக்க வேண்டுமென்ற அழைப்பைத் தேசாதிபதி ஏற்றுக் கொண்டார்.

மண்டபத்திற் சலவைத் தொழிலாளருக்குத் தடை

நாவலப்பிட்டிக் கூட்டத்தில் கண்டனம்

நாவலப்பிட்டி, அக, 23

நாவலப்பிட்டியிலுள்ள அகில இலங்கைச் சலவைத் தொழிலாளர் சங்கக் கூட்டமொன்றில் மண்டபத்திலுள்ள இந்தியக் குடியேற்றத் தொழிலாளர் பாதுகாப்பு அதிகாரி (Protector) சலவைத் தொழிலாளிகளைச் சர்வ உழைப்புத் தொழிலாளிகளாகக் கருதிக் குடியேற்றத் தடைக்கு உட்படுத்தியிருக்கும் செயலை கண்டிக்கப்பட்டது.

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வரும் சலவைத் தொழிலாளிகள் பயிற்சிபெற்ற தொழிலாளிகளாக வகுக்கப்படுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும்படி சென்னையிலுள்ள இந்தியக்குடியேற்றத் தொழிலாளிகள் கொம்மிஷனரை வற்புறுத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

பதிவு செய்யப்பட்டிருக்குந் தொழிலாளர் சங்கமான அகில இலங்கைச் சலவைத் தொழிலாளர் சங்கத்தில் அங்கத்தவர்களாயிருக்கும் சலவைத் தொழிலாளர் விஷயத்திலும் ஒரு விசேஷ ஒப்பந்தத்தை அநுஷ்டானத்துக்குக் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி தொழில் மந்திரியை வற்புறுத்தி மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பருப்புப் பொங்கல் பாகம்பண்ணும் விதம்

குசாலி தண்டுலப்ரஸ்தம் ததர்த்தம்
முத்க பிண்டிகம்।
ஜிதுங்குபலம் குடம் ப்ரோக்தம் தன்மாவம்
சாளிகேரக॥
முஷ்டி மாத்திரம் மரிசம் ஸ்யாத் ததர்த்
தம் சைந்தவம் ஸ்ம்ருதம்॥
ததர்த்தம் ஜீரகம் வித்யாத் குடவம்
கோக்ருதம் விது:॥
கோக்ஷீரேணவ்வமாத் ரேணசம் யோஜ்
யாக மலாலனம்॥
மந்தாக்கிபசுரு தேவ சித்தான்னமித
முத்தமம்॥

இதன் பொழிப்புரை நல்லநெல்லரிசி படி 1 பயற்றம் பருப்பு படி ½ சர்க்கரை பலம் 4 பழந்தேங்காய்த்துருவல் பலம் 4 மிளகு ஒருபிடி உப்பு ¼ பிடி சீரகம் ¼ பிடி பசுநெய் படி ¼ இவற்றிற்குத் தகுதியான அளவு பசுப்பால் (அரைக்க வேண்டியவற்றை யரைத்துச் சேர்த்து) மிருதுவாக எரியும் அடுப்பில் வைத்து நிறைவேற்றிய முத்தான்னம் உத்தமமானது.

குடவ மென்பது 'சப்தஸ்தோம மகாநிதி' என்ற ஸம்ஸ்கிருத அகராதியில் 'ப்ரஸ்த சதுர்த்தாம்ச ரூபே பரிமாணபேத' என்னும் பிரமாணத்தால் ஒரு கொத்தில் நாலிலொரு பாகமாகிய அளவு அதாவது (காற்படி) இதனை உழக்கென்பர்.

ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள்
சுதுமலை

இலங்கைக்கு யுத்தம் வந்தால்?

தாதிமாரின் சேவை அத்தியாவசியயம்

வைத்தியப்பகுதித் தலைவரின் பேச்சு

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கமாதர்படையின் வருடாந்த அணிவகுப்பு சென்ற சனிக்கிழமையன்று கொழும்பு டிராட் ரோட்டிலுள்ள செஞ்சிலுவைச் சங்கத் தலைமைக்காரியாலயத்தில் நடைபெற்றது.

வைத்தியசுகாதாரப்பகுதிடைரெக்டர் டக்டர். எஸ். எப். செல்லப்பா மேற்படி அணிவகுப்பைப் பார்வையிட்டபோது இலங்கைக்காவது இந்தியாவுக்காவது யுத்தம் வந்தால் தாதிமார்களின்சேவை அத்தியாவசியமாயிருக்குமென்று கூறினர்.

மேற்படிபடை ஸ்ரீமதி. வி. கேபிறியல் தலைமையில் அணிவகுத்து நின்று மரியாதை செலுத்தியது.

டக்டர். செல்லப்பா கீழ்த்தேச நிலைமை மருந்துச்சாடிபோல் எந்த நிமிஷத்திலும் வெடிப்பதற்குத் தயாராயிருக்கிறதென்று கர்னல் நாக்ஸ் கூறியதை வியாக்கியானஞ் செய்து அதிகமான தாதிகளின் அவசியத்தை வற்புறுத்தினர்.

செஞ்சிலுவைச்சங்க மாதர்படையின் அணிவகுப்புப்பற்றி மகிழ்ச்சி தெரிவித்து அப்படையினருக்குப் பாராட்டுக் கூறினர்.

கணவன் மூக்கை மனைவி வெட்டினளா?

கம்பஹாக் கோட்டில் மகன் கூறிய சாக்ஷியம்

கம்பஹா, அக், 25உ

ஜேஸ்லின் பேர்னண்டோ என்னும் ஒருமாது அவளது கணவனான சிபியோன் பேர்னண்டோ என்பவரின் மூக்கைக் கத்தியால் வெட்டிப் பலத்தகாயம் உண்டுபண்ணியதாகக் கம்பஹாப் பொலிஸ்கோட்டில் நேற்றுக் குற்றஞ்சாட்டப்பட்டாள்.

அவ்வமயம் எதிரியின் 18 வயதுப் புதல்வனான ஏ. அன்ஸேன் பேர்னண்டோ கூறியதாவது:—

"எனது தகப்பனர் எனதுதாயுடன் வசிப்பதில்லை. அவர் சமீபத்திலுள்ள ஒரு வீட்டில் வசிக்கார். அந்த வீட்டைப்பூட்டிச் சாவியை அவரே வைத்துக்கொள்வார். நேற்று அவர் தனது தாயாரின் வீட்டுக்கு வரும் போது அவருடைய வீட்டுக்கதவு திறந்திருந்தது. கதவை யார் திறந்ததென்று எனதுசகோதரியைக் கேட்டார். எனது தாயார் அவரை வைதாள். தகப்பனர் போய்விட்டார். சிறிது நேரத்திற்குப்பின்னர் அவர்திரும்பி வந்ததும் தாயாருக்கும் தகப்பனருக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. எனதுதாயார் ஒருகத்தியால் எனது தகப்பனரின் மூக்கை வெட்டினர்."

பின்னர்ப் பொலிசாருக்கு இத்தகவல் அறிவிக்கப்பட்டது. அவர்கள் தகப்பனரை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தனர்.

நீதிபதி அடிஷனல் டிஸ்திரிக்ட் நீதிபதி என்ற முறையில் எதிரிமீது குற்றஞ்சுமத்தியபொழுது எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை.

நீதிபதி விசாரணையை நவம்பர் ௴ 28-ந் திகதிக்கு பின்போட்டு வைத்து எதிரியை 300 ரூபாப் பிணையில் விடுதலை செய்தார்.

நம் தமிழ்நாடு வேண்டும் நங்கையர்

[பண்டிதர் திரு. அ. ஆறுமுகம் அவர்கள்]

(முற்றொடர்)

நங்கையர்க்கு ஏற்ற கல்வி

மக்களாய்ப் பிறந்தார் ஒவ்வொருவரும் தாம் பிறவி எடுத்ததன் நோக்கத்தை அறிய வேண்டும். அந்நோக்கத்தினை முற்றுவித்தற்காகத் தமது சக்திக்கும் கூடுமானவரையில் தீயவற்றை நீக்கி நல்லவற்றைச் செய்து தாமும் இன்புற்றுப் பிறவுயிர்களையும் இன்புறுத்த வேண்டும், தன்னை முதலில் பூரணப் படுத்திக் கொண்டு, பின் தனது பூரண ஒளியால் இறைவன் கருவியாக உலகிற் பணிபுரிய வேண்டும். [இறைவனருளின்றிச் செய்யும் தேசப்பணி சுயநலம் கருதியதாயும் தீய எண்ணங்களுக் கிடந்தருவதாயும் நாடக மாத்திரையாவதுமன்றி உண்மைப் பணியாகாது.] நோக்கமும் பணியும் நம்பியர்க்கும் நங்கையர்க்கும் ஒன்றே: இரு சாராரும் மக்களன்றோ? அந்நோக்கத்தைத் தெளிவுபடுத்தி அதனை நிறைவேற்றும் ஆத்மீகக் கல்வியும், உலக வாழ்க்கைக்கு இன்றியமையாத சமையல், தையல், நைப்பணி போன்ற கல்வியும் வேண்டும். வெறும் புத்தகப் படிப்பு அதிகம் பயனைத் தரமாட்டாது. யாவரும் இயற்கையைப் படிக்க வேண்டும்: உலகத்தைப் படிக்க வேண்டும்: தமது சக்திக்குக்கூடுமான தொழில்களைப் படிக்க வேண்டும். பெரியோர்களே! இயற்கையை நோக்குங்கள்: மலை, மரம், குளம், ஆறு, கடல், வெளி இன்னபல இயற்கைத் தோற்றங்களையும் உற்று நோக்குங்கள். பெருமையையும், உயர்வினையும், அரிய செல்வங்களையும் உடையோராய் இருக்க வேண்டும் என்பதைப் போதிக்கின்றது மலை. தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராய் வாழவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது மரம். நீர் தேங்கி வெளிச் செல்லாது அழுக்கு நிறையுங் குளமும், இடையறாது ஓடும் பளிங்கு போன்ற நீரையும் தூய வெண் மணலையுமுடைய ஆறும் சோம்பலே மரணம், இடையறாது உழைத்தலே உயிர் என்பனவற்றையும் தூய்மையான வாழ்க்கையுடையோராய் இருத்தலே யாவராலும் விரும்பப்படும் என்பதையும் போதிக்கின்றன. இவ்வாறே இயற்கையிலுள்ள ஒவ்வொரு பொருளும் ஒவ்வோர் உயிரும் நமக்கு எத்தனையோ பாடங்களைக் கற்பிக்கின்றன. எங்களுடைய விவேகத்தைத் தொழிற் படுத்தாமையாலும், ஊழ் ஒன்றற்கு இறைமை கொடுத்து ஊக்கத்தை அறத்தொலைத்துப் பாழ் ஒன்றப் பொறுமையுடன் எதையும் கவனியாது பராமுகமாய் இருத்தலினாலும் நாம் அறிவு விளக்கத்தையும் அதன்வழி இன்ப நுகர்ச்சியையும் எய்தப் பெறுகின்றோமில்லை. உலகத்தைப் படிக்க வேண்டும் என்பதேன்? பல நூல்களைக் கற்றாராயினும் உலகத்தோடு ஒட்ட ஒழுகுதலைக் கல்லாதவர் அறிவிலாதவர்களாகவே கொள்ளப்படுவர். இதுகாறுங் கூறியவற்றால் நம் நங்கையர்க்கேற்ற கல்வி இவையெனச் சிறிது அறிந்தோம். வீணை, வயலின், ஆர்மோனியம் வாசித்தலும் நங்கையர்க்கு வேண்டற்பாலனவே.

ஆடை அணிகள்

நம்நாட்டு நங்கையர் இயற்கையிலேயே நல்ல அழகு உடையவர்கள். அவர்கள் தூய்மையான வாழ்க்கையிற் றலைப்பட வேண்டின் அழகேயுருவாய தம உடலைப் பிறரைக் கவரச் செய்ய வேண்டுமென்ற நோக்குடன் வித விதமான ஆடைகளாலும் புதுப்புது அணிகலன்களாலும் மிகவும் அலங்கரிப்பதை மட்டுப் படுத்திக் கொள்ள வேண்டும். அழகுக்கு அழகு செய்வார் இல்லையாதலால் அழகேயுருவாய நங்கையரின் காதுகளையும் மூக்குகளையும் கண்டபடி புண்படுத்தித் தொளைத்துக் கல்லும் பொன்னும் நுழைப்பதை நாகரிக நங்கையர் விரும்பமாட்டார். அழகுக்கு இன்னும் அழகுதரும் பொருத்தமான சில அணிகளைக் கொளுவுதல் விழையப்படுமாகலால் அதிக பொருட்செலவில்லாமல் தேவையான சில ஆபரணங்கள் அணிவதையும் விரும்பலாம். ஒரு பெரியார் சொல்லுகிறார் "குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும், மஞ்சள் அழகும் அழகல்ல-நெஞ்சத்து நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையாற், கல்வி அழகே அழகு" என்று. "நங்கையர் முகத்திருக்க நோக்கைத் தோற்றுவிக்கும் இயற்கை நகையென்றே மிகுந்த அழகைத் தருமாகலின் ஒப்பனையின் பொருட்டுச் செயற்கையாகப் பல்வேறு நகைகளைக் கட்டித் தூக்குவது பாவமே" என்பது இன்னொரு பெரியார் வாக்கு. "பொட்டணி யான்றதல் பொய்போன இடைபோய் இறமெனப்பூண், இட்டணியான்" என்றது எங்கள் மணிவாசகப் பெருந்தகையார் வாக்கு.

காதலும் கற்பும்

இதுவரையும், நம் தமிழ்நாடு வேண்டி நிற்கும் நங்கையர் பாலப் பருவந் தொடங்கிக் காதல் ஒருவனைக் கைப்பிடிக்குங் காலத்திற்கு முன்னுக உள்ள மங்கைப் பருவம் வரையுங் கைக்கொள்ள வேண்டிய சில ஒழுக்கங்களை உள்ளுறுத்துக் கூறினேனுக இனியே அவர்தம் உண்மை அறவாழ்க்கை ஆரம்பிக்கின்றதெனக் கொண்டு மேலனது உரையை நடாத்துகின்றேன். பொருளெல்லாம் வினைநிகழ்ச்சியை இயல்பாக உடையன. வினைநிகழ்ச்சி இல்வழி நுகர்ச்சிப் பயன் இன்றாம். உணர்வு மிகுதியுடையராய மக்கள் உள்ளம் இயைதற்கு வேண்டப்படுவது காதல். குடிப்பிறப்பு, அக்குடிக்கேற்ற ஒழுக்கம் உடைமை, குடியை ஆளுந்தன்மை, பருவம், தோற்றம், அழகு, சிறப்பு நலன் என்பனவற்றால் தம்முள் ஒத்த நம்பி ஒருவனும் நங்கை ஒருத்தியும் தம்முள் ஒத்த அன்பினராய் இயைவதே காதல். இன்ன சிறப்பு வாய்ந்த காதலின் இருவர் கருத்தும் ஒருமித்து ஆசாவு பட்டதே இன்பமாகும். பழந்தமிழ் நாட்டில் காதல் மணம் நிகழ்ந்த தென்றும், அக்காலத்து வாழ்ந்த நம்பியர் நங்கையர் யாவரும் தகுதியான நெறியில ஒழுகின ரென்றும், ஓர் ஆடவன் ஒரு நங்கையையும் ஒரு நங்கை ஓர் ஆடவனையுமே காதலிக்கும் சீரிய கொள்கையினையுடையராய் இருந்தார்கள் என்றும், பிறர் கலப்பால் தமிழ் நாட்டில் பொய்யுங் களவுந் தோன்றிய பின்னர் ஐயர் கரணம் யாத்தனர் என்றும் தொல்காப்பிய இலக்கண நூல் கூறுகின்றது. இக்காலிலும், மக்கள் ஒழுக்கம் மனம்போன போக்கெல்லாம் போய்ச் சீர்கெட்டிருத்தலால் பழந்தமிழ் நாட்டுக் காதல் மணம் அநேகமானவர்களால் ஏற்றுக் கொள்ளப்படாதாயிற்று.

இக்காலில் ஓர் ஆடவனே அன்றி ஒரு நங்கையோ ஓரொருகால் தந் தம் கண்களைக் கவரத்தக்க நங்கை பொருத்தியையேனும் நங்கையர் பல்லையேனும் ஆடவன் ஒருவனையேனும் ஆடவர் பலரையேனும் கண்டபோது கொள்ளும் சிற்றின்ப—மிருக—உணர்ச்சியையே அறியாதார் காதலென்று சொல்லுகின்றார்கள். இக்காதல் மிருக இச்சையாகிய புணர்ச்சியை முற்றுப்பெறுங் கால அளவுக்கேயன்றி என்றும் உறைத்து நிற்கும் வலிமையற்ற ஒரு பொய்ப் பண்பின் தோற்றம்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமரனாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் விஷு௵ ஐப்பசி மீ ௧௪௳ வியாழக்கிழமை

மிஸ்ரர் றூஸ்வெல்ற்றின் பேச்சு

அமெரிக்க பிரசாதிபதியாகிய மிஸ்ரர். றூஸ்வெல்ற் அமெரிக்க கடற்படைத் தினத்தன்று ஹிட்லரையும், ஜர்மனியருடைய யுத்த முயற்சியையும் பற்றிச் சில பேசியுள்ளார். அவர் பேசியவற்றுட் பிரதானமானவை; "தென்னாபிரிக்கா மத்தியாபிரிக்கா விஷயமாக ஹிட்லர் இட்டுள்ள படமொன்று என் கைவசமிருக்கின்றது; ஜர்மனியர் எல்லா மதங்களையும் ஒழித்துவிட நோக்கங் கொண்டிருக்கிறார்கள்; அமெரிக்கராகிய நாங்கள் எங்கள் கடற்படையை ஆயத்தப் படுத்தி யுத்தத்திற்குரிய தானங்களில் நிற்கின்றோம்; எங்களுடைய வியாபாரக் கப்பல்களுக்குப் பகைவராற் பங்கம் நேராவண்ணம் எங்கள் கடற்படையைக் கொண்டு பாதுகாக்க வேண்டும்; ஹிட்லருடைய வேகமான முற்போக்கைத் தடுத்துவிடல் வேண்டும்; அவரை அப்படித் தடுத்து அபசெயமுறச் செய்யலாம்" என்னுமிவைகளேயாகும்.

இந்தப் பேச்சு இந்தச் சமயத்திற்கு ஏற்ற பேச்சுத்தானு என்பதையிட்டுப் பலர் ஆக்ஷேபிக்கின்றனர்; அமெரிக்கர்களுள்ளும் சிலரினுஞ் சிலர் மாத்திரம் இப்பேச்சைப் பாராட்ட, பலர் இதனைச் சாரமற்ற பேச்சென்று பரிகசிக்கின்றனரென அறியக் கிடக்கின்றது. மிஸ்ரர். றூஸ்வெல்ற் தம்மிடத்தில் தென்னமெரிக்க மத்திய அமெரிக்க விஷயமாக ஹிட்லர் போட்ட படமொன்றிருக்கின்றதேயென்று கூறினரேயொழிய அந்தப்படம் தம்மிடத்திலிருப்பதால் வரக்கூடிய நன்மை யென்ன, தம்வசம் வராவிட்டால் நேரக்கூடிய தீமையென்னவென்று வெளியிட்டாரல்லர்; அந்தப் படத்தின் தன்மையை வெளிவிடக் கூடாதோவென்று அவரை வினவிய போது, றூஸ்வெல்ற் "அந்த இரகசியத்தை வெளியிட்டால், இனிமேல் அப்படியான இரகசியங்களொன்றையும் நாங்கள் பெற்றுக்கொள்ள முடியாதென்றும், அல்லாமலும் அதை எமக்குத் தந்தவருக்குக் கஷ்டம் வரக்கூடும்" என்றுஞ் சமாதானஞ் சொன்னரே யொழியப் பின்னராயினும் அதை வெளியிடுவதாகக் கூறினாரல்லராம். "ஹிட்லர் மதங்களெல்லாவற்றையும் ஒழித்துவிடுதற்கு முயற்சி செய்கிறார்" என்ற அந்த இரகசியத்தையும் அப்படியே மிஸ்ரர் றூஸ்வெல்ற் வெளியிட மறுத்துவிட்டார். ஹேர் ஹிட்லருடைய பேச்சையும் மிஸ்ரர் சேர்ஜிலுடைய பேச்சையும் இக்காலத்தில் இடையிடையே கேட்டு வருகிறோம்; அவர்களுடைய பேச்சுக்கள் கேட்போர்க்கு உற்சாகத்தைத்தரத் தக்கன வென்பதை எவரும் அனுபவத்தில் அறிவர். ஹிட்லர் இப்படியொரு இரகசியத்தை யிட்டுப் பேச நேர்ந்தால், அந்த இரகசியத்தை வெளியிடுவார். அப்படி வெளியிடுதல் புத்தியல்லவெனக் கண்டால், அதற்காக வேண்டிய இன்னின்ன முயற்சியைத்தாங்கள் செய்ய வேண்டுமென்றுரியினுங் கூறுவர்; எங்கள் பிருத்தானிய மந்திரியாகிய மிஸ்ரர் சேர்ஜில் இப்படியான சந்தர்ப்பத்தில் "அந்த இரகசியத்தை வெளியிட இது சந்தர்ப்பமல்ல; இப்பொழுது அதனை வெளியிட்டாற் பகைவருக்கு அநுகூலமாகமுடியும்" என்று நீர்க்கமாகச் சொல்லுவர்; இப்படியான பேச்சுக்கள்தான் இராச தந்திரிகட்குக் கௌரவத்தைத் தரும் பேச்சாகும். மிஸ்ரர். றூஸ்வெல்ற் விஷயத்தில் நாம் சொல்லத் தக்கது, அவர் சொல்வது நிசமாயிருந்தால், ஹிட்லர் வைத்திருந்த இரகசியத்தை இப்பொழுது தாம் பெற்றுப் பரமரகசியமாக வைத்திருக்கின்றாரென்பதேயாம்! அமெரிக்க பிராஜாதிபதியின் பேச்சு "அடிக்க வந்தான் பார்த்தாயா" என்ற விதமாக இங்குள்ளார்க்குப் புலப்படுகின்றதெனலாம்.

இனி, மிஸ்ரர். றூஸ்வெல்ற் தங்கள் கப்பல்களின் இழவைப் பற்றிப் பேசும்போது பரிதாபமாக இருக்கின்றது: "செப்டம்பர் மீ 4 உ ஒருஅமெரிக்க கப்பல் பகைவரால் அமிழ்த்தப்பட்டது; இன்னுமொரு டிஸ்திரோயர் அக்டோபர் மாசத்திற் பகைவரால் தாக்கப் பட்டது; எங்கள் கடற்படை வீரருள் 11 பேர் பகைவராற் கொல்லப்பட்டனர்; நாங்கள் பகைவர் கப்பல்களைச் சுட வொண்ணாதென விட்டுவிட்டோம்; ஆனல் இனிச் சுடத்தான் வேண்டி வரும்; அமெரிக்கா தாக்கப்பட்டது, பகைவருக்கிரையான "ருகணி" ஒரு யுத்தக் கப்பலன்று, கரையோரத்திலும் உண்ணாட்டிலும் எங்குமுள்ள அமெரிக்கரைப் பகைவர்கள் தாக்க நோக்கங் கொண்டுள்ளனர்" என்று இந்தவிதமாகப் பேசியுள்ளார், இப்பேச்சு இந்தச் சந்தர்ப்பத்தில் தங்களுக்கு நேர்ந்த அநர்த்தங்களை வெளியிடுவதாகவல்லவா முடியும்.

மேலும் ஜர்மனியரை வெருட்டலாகுமென்ற நோக்கத்தோடு மிஸ்ரர். றூஸ்வெல்ற் பேசிய பேச்சைக் கேட்ட ஜர்மனியர் பரிகசிக்கின்றனரென அறிதல் கவலைக்கிடனுகும். பகைவர்கள் என்ன சொல்லுகிருர்கள்? "பேடித்தனமான கரி" "உண்ணாட்டு யூதர் கையிலுள்ள நகையாடத்தக்க பாவை" "எளிய பேச்சு" "வெட்கங் கெட்டது, அசங்கதமானது, மூடத்தனமானது, மூடர்கள் பேசுவதற்கு உத்தியோகத்தர்கள் இராசதந்திரிகள் விடைபகர மாட்டார்கள் ...." என்று இப்படி அமெரிக்க பிரசாதிபதியையும் அவர் பேச்சையும் பரிகசிக்கக் கண்டுள்ளேம். மத்திய அமெரிக்கா தென்னமெரிக்கா விஷயமான ஹிட்லரின் படம் தம்மிடத்திலிருக்கிறதென மிஸ்ரர் றூஸ்வெல்ற் சொன்னதையும் ஜர்மனியர் நம்பாது நிந்திக்கின்றனர். இப்படியான பேச்சைக் காட்டிலும் வாளா மௌனஞ் சாதித்தல் நலமென்பது பலர் அபிப்பிராயம்

மிஸ்ரர் றூஸ்வெல்ற் ருஷியருக்கும் பிருத்தானியருக்கும் அதிக உதவி செய்கின்றாரென்பது நிசம்; இந்தப் பேச்சினுலும்தாம ருஷியருக்குச்செய்யும் பேருதவியை றூஸ்வெல்ற் கடைசிவரையிற் செய்வாரென்பது அறியக்கிடக்கின்றது; அன்றியும் றூஸ்வெல்ற்றின் பேச்சு உறைப்பாயில்லையேயென்பதையிட்டு நாம் அவரை முற்றாகக் குறைகூறுதல் முறையல்ல; ஏனெ? ஹேர் ஹிட்லருடன் ஜர்மனியர் முழுப்பேரும் ஒத்து நிற்கின்றனர்; மிஸ்ரர். சேர்ஜிலுடன் பிருத்தானிய சக்கராதிபத்தியத்திலுள்ள பிரசைகள் அத்தனையும், ஒத்து நிற்கின்றன; ஆனல் மிஸ்ரர் றூஸ்வெல்ற் விஷயத்தில் அமெரிக்கருள்ளும் ஒரு பகுதியார் தங்கள் பிரசாதிபதியின் அபிப்பிராயத்திற்குங் கொள்கைக்கும் மாறுபாடான அபிப்பிராயமுங் கொள்கையுங் கொண்டவர்களாய்க் காணப்படுகின்றனர்.

இவை கிடக்க, "வெள்ளம் வருவதற்கு முன்னர் அணை கோலி வையார்—பெருகுதற்கண் என்செய்வார் பேசு" என்றாங்கு, எங்கள் பிருத்தானியருடைய பூரண உதவியும் ருஷியருடைய சகாயமும் இருக்கும் போது அமெரிக்கர் ஜர்மனியரை அடித்தலின்றி வாளா விருந்து விட்டால், பிறகு ஜப்பானுடைய உதவியும் ஜர்மனியருக்கு வந்து சேருமானல், ஜர்மனியரை வெல்லுதலும் ஹிட்லரை அடக்குவதும் மிஸ்ரர் றூஸ்வெல்ற்றிற்குச் சாத்தியமாமோ?

உலகம்பலவிதக்கதை

"கவலைக்கெல்லாங் காரணன் நானே"

"மாமாவின் மக்கள் சுகமேயிருக்கிறார்களா" என்று முகத்திலே கவலை தோன்ற வினவினர் இருந்தவர்; "ஆம் ஐயா, அவர்கள் நல்ல சுகமே யிருக்கிறார்கள்" என்ருன் இராமன். "மாமா இந்தப் பாகம் வந்ததுண்டோ" என்று இருந்தவர் வினவ, இல்லையென்றான் இராமன். "அவர்கள் எங்கிருக்கிறார்கள்? அவர்களுக்குப் பெண்துணையாக யாருமுண்டோ" என்று இருந்தவர் கேட்க, இராமன் அந்த மடத்தைக்காட்டி" உத்தமடத்திலேதான் இருக்கிறார்கள்; அவர்களுக்குத் துணையாக உங்களுரைச் சேர்ந்த ஒரு ஆச்சியும், அவர்கள் புறப்பட்டு இந்த நாட்டிற்கு வந்தகாலந் தொடக்கம் துணையாக விருக்கிருர் ஐயா" என்று இராமன் சொன்னன். "எவரையும் நோவதாற் பயனில்லை; எல்லாம் விதியின் செயலாகும்" என்று சொல்லிப்பெருமூச்சு விட்டு யோசித்துக்கொண்டிருந்தார் இருந்தவர். சிறிது நேரம் இராமனும் மௌனமாய் நின்றுவிட்டு "ஐயா, அவர்கள் இருக்கும் மடத்திற்கு நீங்கள் வரவொண்ணுதா" என்று பணிவுடன் கேட்டான். இருந்தவருடைய கண்களில் நீர் ததும்பியது. அவர் தன் கண்ணீரை அங்கவஸ்திரத்தினுல் ஒற்றிவிட்டு "இராமன், நீ அறியாததல்ல; என் மாமாவின் பிள்ளைகள், தங்கள் பெற்றோர் உற்றாரை விட்டு, வீடு வளவு பொருள் பண்டங்களை விட்டு தங்கள் சுகங்களையும் வசதிகளையும் விட்டு, அவர்களுடைய குடும்பத்திற் பரம்பரையாக விருந்த கௌரவத்தையும் ஒரு அளவிற்கு விடுத்து, மனத்தில் வைராக்கியங்கொண்டு தம் பெற்றோருக்குத்தானும் சொல்லாமல் இப்படிப் புறப்பட்டுப் பரதேசம் வருவதற்குக் காரணனுக வுள்ளவன் நானே பாவேன்; நான் அந்த நேரத்திலிருந்த என் மதியீனத்தினுல் உடன் படத்தகாத தொன்றிற்கு உடன் பட்டேன். அந்தக் குற்றம் என்னைப் பொறுததது; இப்பொழுது ஊரில் என்னை எல்லாருங் குறை கூறுகிறார்கள்; எனக்கவலை ஒருபுறமிருக்க, என் மைத்துனிமார் என்னை நினைத்தாலும் வெறுப்பர். என் பெயரை யாருஞ் சொல்லக் கேட்டாலும் சினங்கொள்வர்; என்னைக் கண்டால் ஆத்திரங்கொள்வர்; நான் அவர்களுடன் உறுத்தத்தனமாகப் பேசினுலும் அவர்கள் ஏசுவார்கள். ஆனதால் ராமன், என்னை அங்கு வரும்படி நீ கேட்க வேண்டாம்: என்னைக் கண்டதாகவும் நீ அவர்களுக்குச் சொல்ல வேண்டாம்; இதுவே நீ எனக்குச் செய்யவேண்டிய பேருதவி" என்று இடையிடையே கண்களில் நீர் ததும்பக் கவலையோடு கூறினர். இராமன் அவற்றையெல்லாங் கேட்டுக்கொண்டு சிறிது நேரம் சும்மா நின்று "ஐயா, கேட்கிறேனென்று குறைநினைக்கவேண்டாம்; அப்படியானுல், நீங்கள் இந்தப் பக்கமாக வந்த நோக்கமென்னவோ" என்று பயபக்தியுடன் வினவினன். "இராமன், நீ கேட்பது சரி, என் மாமனுர், தம் பிள்ளைகளைப் பிரிந்தநாள் தொடக்கமாக இரண்டு மூன்று வாரம் வரையில ஊணுறக்கமில்லாதவராய்ச் சதா கவலைப்பட்டு கூடியவராக விருந்தார் பின்னர்த் தாம் யாத்திரை செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொண்டு சடுதியிற் புறப்பட்டு விட்டார். அப்படிப் புறப்பட்டுப் பலமாசங்களாயின. அவரைப் பற்றியாக, அவர் பிள்ளைகளாகிய இவர்களைப் பற்றியாக ஊரிலே நாங்கள் ஒன்றும் அறிய முடியாமலிருந்தது. இந்த ஆகாத்தியங்களெல்லாம் என்னுலல்லவோ நேர்ந்தனவென்ற கவலையுடன் நான் இற்றைக்கு இரண்டு வாரத்துக்கு முன் ஊரைவிட்டுப் புறப்பட்டு இந்த நாட்டிற்கு வந்து பல தலங்களிலும் பட்டினங்களிலும் மாமாவையேனும் மக்களையேனும் காணலாமென்று தேடித் திரிந்தேன். இன்று காலைதான் இந்தத் தலத்திற்கு வந்தேன்; வந்தவிடத்து இற்றைக்குச் சற்று முன்பு இவர்களும் இவர்களுடன் ஒரு வயசு சென்ற மனுஷியும் போகக்கண்டேன்; இவர்கள் சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு கோயிலிலிருந்து புறப்பட்டுவர நானும் சிறிது தூரத்தில் இவர்களைப் பின்தொடர்ந்து, இவர்கள் உள்ளே போக, நான் இந்த மடத்தில் வந்து சற்று முன்பு தொடக்கமாக இருக்கிறேன்; இவர்களுடைய சுகத்தை நீ சொல்லிவிட்டாய் அது எனக்கு மன ஆறுதலாய்விட்டது; ஆனல் நான நாளைக்காலை மாமாவைத் தேடிப் புறப்படவேண்டும். கோயில் வாசலுக்குச் சமீபத்திலுள்ள அன்ன சத்திரத்திற்றான் நான் இன்று தங்கியிருக்கிறேன்" என்று இருந்தவர்சொல்ல "ஐயா, தயவு செய்து ஒரு இந்த நிமிஷம் இங்கே இருந்துகொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டு இராமன் மீண்டு தாங்கள் இருக்கும் இடத்திற்கு ஓடிப் போனுன்.

"அக்கா, எனக்குக் கூச்சமாயிருக்கிறது"

இராமன் மடத்திற்கு மீண்டு போய், சகோதரிகள் இருவரையும் கண்டு, சோமசுந்தரம் முன் மடத்திலிருப்பதையும் அவர்களுடைய சுகத்தைப்பற்றித் தன்னிடத்தில் விசாரித்ததையும் சொன்னுன். "அப்படியானுல் அவரை இங்கே வரும்படி நாங்கள் அழைத்தாலென்ன அக்கா" என்று சுந்தராம்பிகை கேட்க, தமக்கை சிறிது நேரம் யோசித்துவிட்டு "அவரை இங்கே கூப்பிட்டு நாங்கள் உபசரிக்க வேண்டியதுதான் முறை. ஆனல் அவர் வர உடம்படுவாரோ என்னவோ தெரியவில்லை; நாங்கள் அழைத்தவிடத்து அவர் வரமறுத்தால் பின் எங்களுக்கு அது பெரும மனவருத்தமாயிருக்குமல்லவா? தங்கைச்சி" என்று சொல்லி யோசித்தாள். "அக்கா, சொல்லுகிறேன் என்று குறைநினையாதீர்கள்; அவர் எங்களைத் தேடித்தான வந்திருக்கவேண்டும்; அப்படிவந்தவிடத்தில் நாங்கள் அதுவும் ஒரு அந்நியவூரில அவரைக் கூப்பிட்டு உபசரிக்காமற் புறக்கணித்தால் அவர் மனம் நோவாதல்லவா; நாங்கள் வரச் சொன்னுல் வருவார்; ஆனதால இராமனுரிடஞ் சொல்லி அவரை இங்கே அழைப்பியுங்கள" என்று சுந்தராம்பிகைசொல்ல, அமிர்தம "அப்படியானுல் இராமனுரிடம் தங்கைச்சி, நீயே சொல்லிவிடும்" என்று தமக்கை சொல்ல, "ஓம், நான் சொல்லுகிறேன், அக்கா" என்று சுந்தரம் இராமனைக் கூப்பிட்டுத் தங்கள் மைத்துனரைத் தாங்கள் இருக்கும் மடத்திற்கு அழைத்துவரச் சொன்னுள். "அம்மா, நீங்கள் சொல்லமுதல், நானுமே அவரை இந்த மடத்திற்கு வரும்படி கேட்டேன். அவர் தாம் உங்களுக்கு ஏதோ பெரும பிழை செய்துவிட்டதாகவும், நீங்கள் தம்மைக் கண்டால் வெறுப்பீர்களென்றும், தாம் வந்திருப்பதை உங்களுக்குத் தெரிவிக்கவேண்டாமென்றுஞ் சொல்லி வரமறுத்தார். ஆனதால நான் போய் வரும்படி கேட்டால் வரமாட்டார்; ஒருபோது நீங்கள் போய் வரும்படி கேட்டால வருவாரென்று நினைக்கிறேன" எனப பதில சொன்னுன் இராமன். "அக்கா, இதற்கென்ன செய்வது; நான் போய் அவரை அழைத்துவரவா" என்று சுந்தராம்பிகை கேட்க, "வேறென்ன செய்யலாம்; அவர் எங்களைப் பிழையாக விளங்கிவிட்டார்போலிருக்கிறது. நீடித்து நீர்விலகப்போவதில்லை; கண்ணே, நீர் தனியே போகவேண்டாம்; ஆச்சிக்கு விஷயத்தைச் சொல்லிக் கூட்டிக்கொண்டுபோய அவரை அழைத்து வாரும்; அதனுல் ஒரு குறையும் வரமாட்டாது" என்று தமக்கை தங்கைக்குப் பரிவுடன் சொன்னுள்; "அக்கா, நீங்கள் சொன்னபடி செய்யத தடையில்லை; ஆனுல எனக்குக் கூச்சமாக இருக்கிறது" என்றுள் சுந்தரம்; "கூச்சம் ஏனம்மா? அவர் உனக்கு ஒரு பிதாவுக்குச் சரியல்லவா? நீர் போய், வாருங்கள் என்றவுடன் எழுந்து வருவார்..." என்று அமிர்தாம்பிகை சொல்லி முடிப்பதற்கிடையில் "அக்கா எனக்கொரு பிதாவுக்குச் சரியானுல, அவர் உங்களுக்கும் ஒரு பிதாவுக்குச் சரிதானே" என்று புன்னகையுடன் சுந்தரம் சொல்ல, அதைக்கேட்ட அமிர்தம் நாணமுற்றுத் தலை குனிந்து 'கண்ணே, வேடிக்கையாகப் பேசுவதற்கு இது சமயமல்ல" என்று சொல்வதற்கிடையில "அக்கா, குறை நினையாதீர்கள், நான் சும்மா சொன்னேன்" என்று தமக்கையின் புறங்கையைத் தன் இரு கைகளாலும் எடுத்துத் தன் கண்ணில் ஒற்றிவிட்டுச் சாமியம்மாளிடம் போய் "ஆச்சி, எங்கள் பெரிய அத்தான் வந்து முகப்பு மடத்தில் இருக்கிறார்; என்னுடன் வாருங்கள், இங்கே அழைத்துவருவோம" என்று சொல்லுதலும், சாமியம்மாள் உடனே எழுந்து கூடிக்கொண்டு போனுள். சாமியம்மா

தொடர்ச்சி 3ம் பக்கம்)

கல்விப் பகுதியின் கொள்கைக்குக் கண்டனம்

பௌத்தர்களுக்குப் பெரும் அநீதி செய்யப்படுகின்றது

கல்வி மந்திரிமீது ஸேர்.பரன் கூறும் குறை

களுத்துறை. அக், 26—களுத்துறைப் பௌத்தர் சங்கத்தின் வருடாந்த வைபவம் இன்று நடைபெற்றது. ஸேர் பரன் ஜெயதிலகா மிஸ்டர். வி. டப்ளியூ. டப்ளியூ. கன்னங்கரா, மிஸ்ரர். ஜே. என். ஜினேந்திரதாஸா மிஸ்ரர். பி. டி. என். குலரத்ன முதலியோர். சொற்பொழிவு நிகழ்த்தினர். அவ்வமயம் பௌத்தர்களின் கல்வி பற்றிச் சில ரசமான குறிப்புகள் வெளியிடப்பட்டன.

ஸேர். பரன் பேசியதாவது:—கிறீஸ்தவ பாடசாலையிற் கல்வி பயின்றுவும் பௌத்தர்கள் தொடர்ந்து பௌத்தர்களாகஇருக்கமுடியுமென்பதற்கு நான் என்னையே ஓர் உதாரமாகக் குறிப்பிட விரும்புகின்றேன். இதற்குக் காரணம் நான எனது கல்வியை ஒரு பௌத்த கோயிலுடனிருக்கும் பாடசாலையிற் பயின்றதே யாகும். இதன் பலனுக நான் மாணவனுக இருந்தகாலையில் வெஸ்லிக்கல்லூரித் தலைவா விடுத்த ஒரு கூற்றை மயக்கும் சாமர்த்தியம் பெற்றிருந்தேன். அஃதாவது, இவ்வுலகத்தில் கிறீஸ்துமதம் தோன்றிய பின்பே ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்தப்பட்டன என்று அக்கல்லூரித் தலைவர் சொன்னர். ஆயின், கிறீஸ்து பிறப்பதற்குப் பலநூற்றாண்டுகளுக்கு முன், இந்தியாவிலும் இலங்கையிலும் அத்தகைய ஸ்தாபனங்கள் இருந்திருக்கின்றன என்று நான் மேற்படி கல்லூரித் தலைவருக்கு மறுப்புக்கொடுத்தேன்.

"அன்றியும், ஒரு பாடசாலையை அரசாங்கம் பதிவு செய்து கொள்வதற்குமுன் உபாத்தியாயர்களின முழுச் சம்பளங்களை செலுத்தப்பட்டு விடவேண்டுமென்று கல்வி மந்திரி மிஸ்டர். வி. டபளியூ. டப்ளியூ. கன்னங்கரா ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார். இதுபற்றி நான சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். 1939-ம் ஆண்டில் வித்திபாலங்காரப் பிரிவேண யுடன் சேர்ந்த ஒரு பாடசாலையை நான் ஆரம்பித்தேன். சகல தேவைகளும் குறைவின்றிப் பூர்த்திசெய்யப்பட்டு வந்தாலும் அப்பாடசாலை அரசாங்கத்தாற் பதிவு செய்யப்படவில்லை. இதுபற்றி அரசாங்க சபையிற் சொல்ல வேண்டியதோ அல்லது அதற்கான மானயங்களைக் கோருவதோ மந்திரியின் கடமையாகும்.

அதிருப்திகரமான கொள்கை

கல்விப் பகுதியின் இப்போதைய கொள்கை அதிருப்திகரமானது. ஒரு பௌத்த பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 5 வருஷம் கழிந்தபின்பே அதைப் பதிவு செய்யவேண்டுமென்பதுதான் கல்விப்பகுதியின் கொள்கையென்று அறிகிறேன். இதனுல் பௌத்தர்களுக்குப் பெரிய அநீதி இழைக்கப்படுகிறது.

முன்னாட்களில் கிறிஸ்தவ பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட 3 மாதங்களில் அவை பதிவு செய்யப்பட்டன. ஆயின், பௌத்தர்கள் பாடசாலைகள் ஆரம்பிக்கத் தொடங்கவும் இத்தகைய சட்ட விதிகள், கொண்டு வரப்படுகின்றன.

கல்வி மந்திரிதான இக்குறைகளை நீக்கவேண்டும்.

மிஸ்ரர். வி. டப்ளியூ. டப்ளியூ கன்னங்கரா பேசும்போது, பௌத்தர்களின் பணம் பௌத்த குழந்தைகள் மதம் மாற்றப்படுவதற்குப் பயனபட ஒருபொழுதும் அதை மதிக்க முடியாதென்று குறிப்பிட்டார்.

நாலந்த வித்தியாலயத் தலைமையாசிரியர் மிஸ்டர் ஜே. என். ஜினேந்திரா பேசும்போது தாம் கிறீஸ்தவ பாடசாலையிற் கல்வி பயின்றுலும் வீட்டில் "பிரித்" ஜெபித்து வந்ததாகவும் பௌத்தர்களின் பாடசாலைகளில ஜாதி பேதம பாராட்டப்படுகின்றதென்ற கூற்று ஆதாரமற்றதெனவும் கூறினர்.

இளைஞர் சமூக ஊழியச் சங்கம்

கயிறுதிரிக்கும் கைத்தொழிற்சாலைத்திறப்பு

தென்னந் தும்புக் கயிறுகளும் நாற் கயிறுகளும் திரிக்கும் கைத்தொழிற் சாலையொன்று இம்மாதம 24ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 10½ மணியளவில் கௌரவ திரு. டி. எஸ். சேனநாயகாவால் அகில யாழ்ப்பாண இளைஞர் சமூக ஊழியச் சங்கத்தால் நடத்தப்படும் காகிதத் தொழிற்சாலைக்குப் பக்கத்தே திறந்துவைக்கப்பட்டது.

மிஸ்றர் சேனநாயகா கூட்டத்திற்கு வந்ததும் சங்கத்தைச் சேர்ந்தோர் மிக்க விமரிசையாக அவரை வரவேற்றனர். சங்கத்தைச் சேர்ந்த பெண் அங்கத்தவர்கள் வரிசையாக நின்று மிஸ்றர் சேனநாயகா மீது மலர்களைத் தூவினர். மிஸ்றர் சேனநாயகாவுக்கும் மாகாணத்தலைவருக்கும் மாலைகள் சூட்டப்பட்டபின் மிஸ்றர் சேனநாயகா சங்கத்தால் நடாத்தப்படும் காகிதக் கைத்தொழிற்சாலைக்கு அழைத்துக் கொண்டு போகப்பட்டு அங்கு காகிதஞ் செய்யும் முறைகள் அவருக்குக் காட்டப்பட்டன. சங்கத்தின் கைத்தொழில் நிருவாகஸ்தராகிய எஸ். சேனதிராசா மேற்படி கயிற்றுத் தொழிற்சாலையைத் திறந்து வைக்கும்படி மந்திரியாரை வேண்டிக் கொண்டபோது, சங்கத்தின் முதலாவது முயற்சியாகிய காகிதக் கைத்தொழில் சித்தியடைந்து விட்டதென்றும், அதன் பின்னரே கயிற்றுத் தொழிலைத் தாம் ஆரம்பிப்பதாகவும், அத்தொழிலால் தென்னைப் பொருள்களுக்கு மதிப்புண்டாகுமென்றும், வேலையற்றோர்க்கு அது ஓர் லாபகரமான குடிசைக் கைத்தொழிலென்றுங் குறிப்பிட்டார். மேலும், சளையாத ஊக்கத்திலும் தைரியத்திலும் விசுவாசத்திலும் மிஸ்றர் சேனநாயகா பராக்கிரமபாகு என்னும் சிங்கள அரசரை நினைவூட்டுகின்றாரென்றும் சிலர் சிங்களவரையும் தமிழரையும் பிரிக்க முயல்கின்றனரென்றும், பொதுவான பாரம்பரியம், கலை முதலியவற்றைக் கொண்ட இவ்விரு சாதியாரையும் பிளவுபடுத்த முடியாதென்றும் இவ்விரு சாதியாருக்குமிடையே முட்டுக் கட்டையாக இருக்கும் பாஷைத் தடையையும் நீக்குதற்காகச் சங்கம் சிங்கள பாஷைப் படிப்பைப் பரப்பி வருகின்றதென்றுங் குறிப்பிட்டார்.

மிஸ்றர் சேனநாயகா குறித்ததொழிற் சாலையைத் திறந்து வைத்தார்.

மிஸ்றர் சேனநாயகாவைக் கௌரவிக்கும் நோக்கமாக நடத்திய பொதுக் கூட்டத்தில் சங்கத் தலைவர் திரு. கே. பத்மநாதன் தலைமை வகித்தார். ஒரு வரவேற்புப் பத்திரம் மிஸ்றர் சேனநாயகாவுக்கு அளிக்கப்பட்டது.

அதன்பின், செல்வி எஸ். இரஞ்சிதம் தேசியப்பாட்டுக்கள் பாடினர்.

மிஸ்றர் சேனநாயகா, தாம் சங்கத்தின் நல்ல வேலைகளைக்கண்டு வியப்படைவதாகவும் வாலிபர் இவ்வாறு கைத்தொழில் விவசாயத் துறைகளில் இறங்கிக் கருமமாற்றின், அரசாங்க உத்தியோகங்களுக்காகப் போட்டியிட்டு அதனுல் ஏற்படும் ஒற்றுமையின்மை குறைந்து விடுமென்றும், வகுப்புவாதம் என்று பேசப்படுகின்றதேயன்றி உண்மையில் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையே எவ்வித வித்தியாசமு மில்லை யென்றும் அவர்கள் இருசாதியாரும் தத்தம் உள்ளங்களில் ஒருவருக் கொருவர் பெரிய அன்புடையவர்களாயிருக்கின்றனரென்றும் இப்போதைய அரசியல் அபிப்பிராயபேதம் தற்காலிகமானதே யென்றும் யாழ்ப்பாணத்திலுள்ள இந்துக்கள் யாழ்ப்பாணத்தில் ஒரு புத்த கோயில் கட்டுவதற்குத் தஞ்சமபக் கோயில் நிலத்தையே கொடுத்திருக்கிறார்களென்றும், புத்தர்களும் இந்துக்களுடைய தெய்வங்களின் விக்கிரகங்களைத் தங்கள் விகாரைகளில்வைத்திருக்கிறார்களென்றும், ஆயின் பொருளாதாரச் சுதந்திரமின்மையே வித்தியாசத்துக்குக் காரணமென்றும், அரசாங்க உத்தியோகங்களைப் பெறவேண்டுமென்ற விருப்பமே எல்லாவிதமான தொந்தரவையும் தந்ததென்றும், தாம் கொழும்புக்குப் போனதும், சங்கஞ் செய்து வரும் பெரிய வேலையைப்பற்றி மிஸ்றர் கோரியாவுக்குச் சொல்லப்போவதாகவும், இதுபோலக் குடிசைக் கைத்தொழில்களைச் செய்து வருவது போல இன்பகரமானது வேறொன்று மில்லை யென்றும், சங்கம், காகிதம், மை, தும்புக்கயிறு, மூளிழைக்கயிறு முதலியவற்றைச் செய்து வருவதைக்காண உற்சாகமாக இருக்கிறதென்றும், இவற்றோடு நில்லாமல் இன்னும் பல கைத்தொழில்களை ஆரம்பித்து நாட்டுக்கு நல்ல பயன் விளைக்கக் கூடிய கருமங்களைச் சங்கம் செய்யவேண்டுமென்றும், தம்மாலான உதவியைத் தாம் எப்போதும் சங்கத்துக்குச் செய்ய ஆயத்தமாக இருப்பதாயுங் கூறினர்.

மிஸ்றர். வேதாரணம் யாழ்ப்பாணத்தின் தேவைகள் சிலவற்றை மந்திரியாருக்கு எடுத்துக் கூறினர்.

சங்க உபதலைவி செல்வி டி. நேசரத்தினத்தாலும் திரு. எஸ். சேனதிராசாவாலும் நன்றி கூறப்பட்டது.

நெசவுத் தொழில் வல்லுநரான திரு. கே. நடராஜாவால் சிங்களத்தில் ஒரு தேசியப் பாட்டுப் படிக்கப்பட்டது. மந்திரியார் அதைப் பெரிதும் பாராட்டினர். கூட்டம் இனிது நிறைவேறியது.

மந்துவிலில் கோடரி வீச்சு

எதிரிக்கு 3வருடக் கடூழியம்

நமது நிருபர்

27-10-41

சாவகச்சேரி டிஸ்திறிக்கைச் சேர்ந்த மந்துவிலில் வசிக்கும் கன்னியன்—மயிலன் என்ற 1941ம் ஆண்டு மேமீ 11-ந்திகதி அவ்வூர்ப் பேன்னன் - சின்னத் தம்பியைக் கோடரியால் வெட்டிக் கொலைசெய்ய எத்தனித்ததாகக் குற்றஞ்சாட்டிய வழக்குச் சுப்பிறீம் கோட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கின் சாரமாவது:-

இச்சம்பவத்திற்கு முதல்நாள் காயக்காரனும் எதிரியினுடைய தம்பியார் கன்னியன் செல்லனுமாக "கிளித்தட்டு" என்னும் விளையாட்டை வேறு பிள்ளைகளோடு விளையாடினர். இப்படி இவர்கள் விளையாடினபோது விளையாட்டில் இவர்கள் இருவருக்கும் சண்டை மூண்டு ஒருவரை யொருவர் அடித்துக்கொண்டனர்.

அடுத்த நாளாகிய இச்சம்பவத்தன்று எதிரியும் சகோதரர்களுமாக ஆயுதங்களோடு காயக்காரன் வீட்டிற்குச் சென்று அவனைக் கூப்பிட்டனர். காயக்காரன் வெளியே சென்றதும், எதிரி ஒரு கோடரியை ஓங்கினன். காயக்காரன் தனது கையைக் கொடுத்த வெட்டைத் தடுத்தான். அந்த வெட்டுக் கையில் விழுந்தது. எதிரி இரண்டாம்முறை அவனுடைய வயிற்றில் வெட்டினன். காயக்காரன் சத்தமிட்டுக் கொண்டு நிலத்தில் விழுந்துவிட்டான். எதிரி அவ்விடத்தைவிட்டு ஓடிவிட்டான். சத்தங்கேட்டு அனேகர் அங்கு கூடினர். காயக்காரன் அறிவு மயக்கி நிலத்திற் கிடந்தான். இசசம்பவம் அவ்வூர் விதானைக்கும் பொலிசாருக்கும் அறிவிக்கப்பட்டது. பொலிசார் இடத்திற்குச் சென்று காயக்காரனை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றனர்.

இவ் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டுச் சில சாக்ஷிகளை விசாரணை செய்தபின்னர் எதிரி தம்மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டினும் குறைந்த குற்றச் சாட்டாகிய கைபிழைபாடாய்க் கொலை செய்ய எத்தனித்ததாகிய குற்றச்சாட்டிற்குக் குற்றவாளியென ஒப்புக்கொண்டான். இதனை முடிக்குரிய நியாயவாதியும் யூரிக்கனவான்களும் ஒத்துக்கொடுத்தனர். நீதிபதி எதிரிக்கு மூன்றுவருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார். தண்டனை விதிக்கும்போது, எதிரிக்குத் தாம் குறைவான தண்டனை விதிப்பது எதற்காகவென்றுல், எதிரி விதிக்கப்பட்ட தண்டனையை அனுபவித்த பின்னர்த் திரும்பிவந்து நன்மையாக நடந்துகொள்வான் என்ற நம்பிக்கையைக் கொண்டே இப்படித் தீர்ப்பதாகக் கூறினர்.

அவதூறு வார்த்தைகளை எழுதிஒட்டியதாக

எதிரி பிணையில் விடப்பட்டார்

28-10-41

சோனக தெருவில் வசிக்கும் காட்டுபாவா முகமெட் இபிறகீம் அவதூருகக் கெட்டசொற்களை இருவருக்குமாறு எழுதிச் சுவரில் ஒட்டியதாகக் குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் M. S. S. சிறிவர்தனு ஒருவழக்கைப் பதில் நீதிபதி மிஸ்டர் C. L. செல்வரத்தினம் முன்பாகத் தொடர்ந்தார். அப்போது சின்னத்தம்பி முகைதீன் கண்டு கூறியவற்றின் சாராம்சமாவது:-

சென்ற 16-10-41ந் திகதி இரவு 11 மணி வரையில் நான் என்னுடைய தேசிக் கடையைப் பூட்டிய பின்னர்க் கோமு என்பவருடன் கூடிக்கொண்டு வீட்டிற்குச் சென்றேன். நான் என்னுடைய வீட்டுக்குப் போகும்போது வழியில்'கமல்' என்னும் பள்ளிவாசலைக் கடந்து தான்செல்லவேண்டும். நான் பள்ளிவாசலுக் கருகாமையிலுள்ள சந்தியால திரும்பினதும், யாரோ ஒருவர் ஒரு கடுதாசியைப் பள்ளிவாசற் சுவரில் ஒட்டுவதைக் கண்டேன். அப்போது கிட்டப்போனதும எதிரியைக் கண்டு "என்ன ஒட்டுகிறாய்" என்று கேட்டேன்" எதிரி "ஒருவருக்கும் இதைச் சொல்லவேண்டாம். நான் குண்டான் முகமதுவின் மனைவியையும் முகமெட்டையும் பற்றி ஒரு அறிவித்தல் ஒட்டுகிறேன்" என்றார். பின்னர் அவரும் நானுமாக வீட்டை நோக்கிச் சென்றோம். வழியில் அவர் தன்னுடைய வீட்டுப்பக்கமாகத் திரும்பிச் சென்றார். நானும் கோமுவுமாக எங்கள் வீட்டுப்பக்கமாகச் சென்றோம். பின்னர் நானும் கோமுவுமாகத்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

கல்விச் சீர்திருத்தத்தின் அவசியம்

டக்றர் அதிகாரத்தின் ரசமான பேச்சு

யாழ்ப்பாணம் அக் 25—

கோப்பாய் வி. எம். எஸ். ஆங்கில பாடசாலையிற் "கல்விச் சீர்திருத்தம்" என்னும் பொருள்பற்றிக் கோட்டே ஆனந்த சாஸ்திராலயத் தலைவர் டக்றர் இ. டப்ளியூ. அதிகாரம் என்பவர் பேசும்போது தனது மாணவர்கள் செய்துகொண்ட இரு மனுக்களுக்கு மறுமொழியாக ஒரு கிறிஸ்தவ குருவினிடம் சேட்டிபிக்கெற் வாங்கவேவேண்டுமென்று கூறப்பட்டதாகவும், இது மிகவும் வருந்தத்தக்க காரியமென்றும் குறிப்பிட்டார். அவர் மேலும் சொன்னதாவது:—

"அரசாங்கம் எப்பொழுதும் நடுநிலைமை வகிக்கவேண்டும். இந்துக்களும் பௌத்தர்களும் தத்தம் உரிமைகளைப் பாதுகாப்பதில் உசாராக இருக்கவேண்டும்.

"தாய்ப்பாஷை மூலம் கல்வி புகட்டவேண்டும்"

கல்விச் சீர்திருத்தம்பற்றி எழுதப்பட்டிருக்கும் மிகச் சிறந்த கட்டுரைகளில் இந்தியாவைச் சேர்ந்த டி. என். விக்கயரா என்ற ஜெஸுட் சாமியாரின் கட்டுரை ஒன்றாகும். "அந்நிய பாஷையைக் கற்கும்படி குழந்தைகளைத் தூண்டுவது தீங்கானது. நாம் பின்னுற்றான் ஆங்கிலங் கற்கவேண்டும். நமது நாட்டின் க்ஷேமத்தில் நமக்கு அக்கறை உண்டென்றால், இம்மாற்றம் செய்யவேண்டிய அவசியம்" என்று சாமியார் விக்கயரா கூறி இருக்கிறார்.

ஆங்கில அறிவு இல்லாமலே அரசாங்க அலுவல்களைக் கவனிக்கக்கூடியவாறு மாணவர்களுக்குக் கல்வி பயிற்றுவிக்கவேண்டும்.

ஆசிரியர்களின் உடை

ஆசிரியர்கள் உடை உடுக்கும் பாவனைகளிலிருந்து தங்கள் பெற்றோர் அநாகரிகர்களென்று குழந்தைகள் தங்கள் மனதில் எண்ண இடமேற்படுகிறது.

ஆசிரியர்கள் சீனக்காற்சட்டைகள் அணிகிறார்கள். குழந்தைகள் வீட்டிலிருக்கும் அந்தஸ்துக்கு இஃது உயர்ந்ததாகவே தோன்றுகிறது. இதனால் குழந்தைகள் தங்கள் பெற்றோர்களை அவமதிக்கிறார்கள். தவிர, தினசரி 4 அல்லது 5 மணி நேரம் குழந்தைகள் ஒரு புதிய கலாசாரத்தைக் கற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். எனவே நாம் கையாள வேண்டிய முதலாவது சீர்திருத்தம் தாய்ப்பாஷையிலேயே கல்வி போதிக்கப்படவேண்டும்.

கலியிலும் தெய்வத் திருவிளையாடல் காண வேண்டும் பக்தர்கள்
பழநி ஆண்டவரைப் பிரார்த்தியுங்கள்.
உங்கள் பக்திக்கேற்பப் பழநி ஆண்டவர் அருள்பாலிப்பார். படிப்பு, உத்தியோக உயர்வு, கல்மணம் யாவும் சித்திக்கும். நாம நக்ஷத்திரத்தால் மாதக் கார்த்திகை தோறும் அர்ச்சனை செய்து 1 வருடம் வரை தவறாது தபால் மூலம் பிரசாதம் அனுப்ப வருட சந்தா ரூபா 6—75
P. நடராஜபண்டாரம்
மலைக்கோவில் அபன்மிராஸ் பழநி
Q 92 A 25-8-41—24.11.41 (வி)

விவாகப் பதிவு

கரவெட்டி கிழக்கு வாசரும் வட்டுக் கோட்டை கிழக்குச் சைவத் தமிழ்ப் பாடசாலைத் தலைமை ஆசிரியருமாகிய திருவாளர் வி. கணபதிப்பிள்ளை அவர்களின் ஏக புத்திரி சௌபாக்கியவதி சிவக்கொழுந்தம்மாவுக்கும் கரவெட்டி கிழக்கு, திருவாளர் க. வேலுப்பிள்ளை அவர்களின் சிரேஷ்ட புத்திரனும் மாத்தறைப் பகுதியைச் சேர்ந்த கந்தறை அரசினர் பாடசாலைத் தலைமை ஆசிரியருமாகிய செல்வச் சிரஞ்சீவி கந்தையா பிள்ளைக்கும் சென்ற ஐப்பசி மாதம் 8-ந் திகதி வெள்ளிக்கிழமை இரவு 9½ கு மேலுள்ள மிதுன லக்கின சுபமுகூர்த்தத்தில் மணமகளின் இல்லத்தில் பல்சனர் சமூகத்தில் விவாகப் பதிவு முதலாய கிரியைகள் நிறைவேறின. கடித

மேற்படி விவாகப்பதிவு மகிழ்ச்சிக்காக யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைக்கு நன்கொடையாக உதவிய ரூபா ஒன்று பெற்றோம்.

சை. ப. சபைத்தனாதிகாரி

கல்விச் சீர்திருத்த விசேஷ சபையின் விசாரணை

மதமாற்றம் பற்றிப் பலத்த விவாதம்

கல்வி மந்திரி கூற்றுக்குப் பிஷப்பின் ஆக்ஷேபனை

சென்ற சனிக்கிழமையன்று காலை இலங்கைப் பரிசுத்த சபையைச் சேர்ந்த தூதுக்கோஷ்டியொன்று கல்விச் சீர்திருத்த விசேஷ நிருவாகசபைமுன்னிலையிற் சாக்ஷியங் கூறியது. அவ்வமயம் கிறிஸ்தவ பாடசாலைகளிற் சமீபகாலத்தில் நடைபெற்ற மதமாற்றங்கள் பற்றி நிருவாகசபைத் தலைவரான கல்வி மந்திரி மிஸ்டர். ஸி. டப்ளியூ. டப்ளியூ. கன்னங்கரா கூறிய சில விஷயங்களை நிருவாக சபை அங்கத்தவர்கள் சிலரும் கொழும்பு பிஷப்பும் ஆக்ஷேபித்தனர்.

மேற்படி தூதுக்கோஷ்டிக்குக் கொழும்பு பிஷப் சங்கை வி. டி. ஹோர்ஸ்லி தலைமை வகித்தார். பிஷப் சமர்ப்பித்த அறிக்கை ஒன்றிற் கிறிஸ்தவ பாடசாலைகளிற் பயிலும் வேறு மதக் குழந்தைகள் மதமாற்றஞ் செய்யப்படுகின்றனவென்று அப்பாடசாலைகள்மீது குற்றஞ் சாட்டப்பட்டிருப்பதாயும் "அவ்விதம் நடைபெறுவதில்லையென்று நாங்கள் கூறும் பதில் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

மதமாற்றம்பற்றிய விஷயம்

மதமாற்றம் சம்பந்தமாக ஒருபலத்த விவாதம் ஆரம்பித்தது.

தலைவர்:- மூலைமுடுக்குகளில் ஏன் நீங்கள் பாடசாலைகளை ஸ்தாபிக்கவேண்டும்?

பிஷப்:- ஜனங்கள் அவ்விதஞ் செய்யும்படி கேட்கின்றனர்.

பிதா லெகார்:- இப்பகுதிகளில் அரசாங்கம் பாடசாலைகளை ஏற்படுத்துவதுமில்லை.

இப்பாடசாலைகள் மதமாற்றஞ் செய்வதற்கு உபயோகிக்கப் படுகின்றனவா என்பது பற்றி நீண்ட விவாதம் நடைபெற்றது.

அவ்வாறு சொல்லப்படுவதை பிஷப் மறுத்தார். மிஸ்டர். ஜி. கே. டப்ளியூ. பெரேரா:- உங்கள் பாடசாலைகளில் குழந்தைகளுக்கு விக்கிரகங்களை வணங்க வேண்டாமென்று போதிக்கின்றீர்களா?

பிஷப்:- நாங்கள் அவ்விதஞ் செய்யக் காரணமில்லை. கல்விச் சட்டவிதிகளை மாத்திரமே நாங்கள் அநுசரிக்கிறோம்.

கிறிஸ்தவ பாடசாலை யொன்றிற் சில குழந்தைகள் மதமாற்றஞ் செய்யப்பட்டது பற்றித் தாம் சமீபகாலத்தில் ஒரு பத்திரிகையிற் படித்ததாகத் தலைவர் தெரிவித்தார்.

பிஷப்:- ஒருவர் தமது மனத்திலிருந்து மாறுவதை யார்தான் என்ன செய்ய முடியும்? அத்தகையோர் பேர் பௌத்த சமயிகளாகின்றனர்.

தலைவர்:- அரசாங்கம் பணஞ் செலவிடும்பொழுது அப்பாடசாலைகளை மதமாற்றத் தேவைக்கு உபயோகப்படுத்துவது நியாயமாகுமா?

மிஸ்டர். ஜி. ஏ. வில்லே:- அவ்விதங் கூறுவது விஷயத்தை மிகைப்படுத்துவதாகும்.

நிரூபிக்கும்படி மந்திரி கேட்கப்பட்டார்

மந்திரி கூறியதை நிரூபிக்கும்படி மிஸ்டர். டி. பி. ஜாயா கேட்டார்.

பிஷப்:- நீங்கள் கூறும் பாடசாலைகள் எவை?

தலைவர்:- எனக்குத் தெரியாது. பத்திரிகையிற் பார்த்தேன்.

பௌத்த சமயி ஒருவர் கல்வி மந்திரியாக இருப்பதைவிடக் கிறிஸ்தவர் ஒருவர் அப்பதவியில் இருப்பதுநல்லதென்று மிஸ்டர். குலரத்ன கூறினர்.

தலைவர்:- நான் பௌத்த பாடசாலைகளை ஆதரிப்பதாகச் சிலர் நினைக்கின்றனர். ஆயின், பௌத்த சமயிகள் என்மீது அதிகமாகக் குறை கூறுகின்றனர்.

இவ்வளவில் மிஸ்டர் கன்னங்கரா கூட்டத்தை விட்டுச் சென்றார். மிஸ்டர். வில்லே தலைமை வகித்தார்.

இலங்கைக் கிறிஸ்தவசபை அடுத்ததாகச் சாக்ஷியங் கூறிற்று.

மறியற்காரன் கஞ்சா வைத்திருந்தான்

எதிரிக்கு ஒருமாதக் கடூழியம்

28-10-41

யாழ்ப்பாணம் மறியற் கூடத்துள மறியற்றண்டனை அநுபவிக்கும் V. 469ம் இலக்க மறியற்காரனுகிய M. H. பீறிஸ் என்பவன் சென்ற 1941ம் ஆண்டு பெப்ரவரி மீ 16ம் திகதி இரண்டு பார்சல்கள்கொண்ட பத்துக்கிறெயின் கஞ்சாவைச் சட்ட விரோதமாக வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டி ஓர் வழக்கு யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் தொடரப்பட்டிருந்தது. இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு விசாரணையின்பின் நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு ஒருமாதக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

அவதூறு வார்த்தைகளை எழுதி ஒட்டியதாக

2-ம் பக்கத் தொடர்ச்சி

திருப்பிப் பள்ளிவாசற் பக்கமாகச் சென்றோம். அந்த அறிவித்தலை எங்களால் வாசித்துக்கொள்ள முடியாமலிருந்தது. அந்த அறிவித்தலை உரித்து எடுத்தோம். அதனைக் கொண்டு நயினாமுகமது வீட்டிற்குச் சென்றேன். கோமு நின்றுவிட்டார். நயினாமுகமதுவின் மகன் வெளியே வந்தார். அவரிடம் அந்த அறிவித்தலைக் கொடுத்தது தகப்பனார் இந்தியாவால வந்ததும் கொடுக்கும்படி கூறிவிட்டுச் சென்றுவிட்டேன்.

இதன்பின்னர் நீதிபதி எதிரியை 100 ரூபாப் பிணையில் விட்டு வழக்கை மேல்விசாரணைக்கு வருகிற 18-11-41க திகதிக்குத் தவணையிட்டார்.

தி மலாயன் டிரேடிங் கொம்பனி
(சிங்கப்பூர்க் கொம்பனி)
இரும்பு, பித்தளைச்சாமான்கள், சீமேந்துவகைகள் விற்பனவு செய்வோர்
பெரியகடை, யாழ்ப்பாணம்.
"புரோப்ரைட்டர்"
K. A. இரத்தினசிங்கம்
Y 19. 4.3.41—3.3.41

கொழும்பு விவேகானந்த சபை

மேற்படி சபை மண்டபத்தில் ஐப்பசிமாதம் 5ந் தேதி (21-10.41) செவ்வாய்க்கிழமையன்று மாலை 5½ மணியளவில் மெய்கண்ட தேவரின் குருபூசை மிகவுஞ் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. அவ்வமயம் சொற்றமிழ்வும் சைவசித்தாந்த நூலுணர்ச்சியுஞ்சான்ற திரு. அ. நள். தியாகராஜா அவர்கள் மெய்கண்ட தேவரின் பெருமையையும் சிவஞானபோதத்தின் சிறப்பையும் பற்றி இனியதொரு சொற்பொழிவாற்றினர்கள்.

இதில் அவர்கள் சிறப்பாகப் பதினோராம் சூத்திரத்திலுள்ள 'அயரா வன்பி னரன் கழலின்' பெருமையையும் பன்னிரண்டாம் சூத்திரத்திலுள்ள 'மாலற நேய மலிந்தவர் வேடமும் ஆலயந்தானும் அரனெனத் தொழுமே' என்ற அடியாருறவின் பலனையும் சிவாலய வழிபாட்டின் இன்றியமையாமையையும் அங்கு கூடியிருந்த அன்பர் கூட்டத்தினர்க்குச் சிறப்பாக எடுத்துரைத்தார்கள். தேவார திருவாசகம் திருமந்திரம் திருக்கோவையார் ஞானாமிர்தம் முதலிய சைவசித்தாந்த நூல்களிலிருந்தும் நாலாயிர திவ்விய பிரபந்தத்திலிருந்தும் பல அரிய மேற்கோள்கள் எடுத்துக்காட்டித் திருவடியினியல்பைநன்கு விளக்கினர்கள்.

பண்டைத் தமிழரசர்கள் சிவாலய வழிபாட்டில் மேம்பட்டு விளங்கினர்கள் என்பதையும் சைவ அரசர்களிற் சிறந்தவருமான கோச்செங்கட் சோழ மகாராசன் எழுபது சிவாலயங்களையும் சில விஷ்ணு ஆலயங்களையும் சமைப்பித்தா னென்பதைத் திருமங்கையாழ்வார் பாடலிலிருந்து எடுத்துக் காட்டியது இங்குக்குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

நால்வர் குருபூசைகளையும் சந்தானாசாரியர் குருபூசைகளையும் விதிப்படி செவ்வனே நடாத்திய மேற்படி சபைக் காரியதரிசி திருவாளர் கா. பொன்னையா அவர்களின் உழையா முயற்சியும் தளரா ஊக்கமும் சைவ நன் மக்களாற் பெரிதும் பாராட்டற் பாலனவாம்.

உலகம்பலவிதக்கதை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ளின் பிறகே சென்ற சுந்தரம் மடத்தை யடைந்தவுடனே, "ஏன் இவ்விருப்பான்! அத்தான், நாங்கள் இருக்கும் மடத்திற்கு வாருங்கள்" என்று கிளியென மொழிந்து மயிலென ஒதுங்கி நின்று நமஸ்காரஞ் செய்தாள். யோசனையில் மூழ்கித் தன்னை மறந்திருந்த சோமசுந்தரன் அந்த அன்பான வார்த்தையைக் கேட்டமாத்திரத்தே திடுக்குற்றான்; திரும்பிப் பார்த்த மாத்திரத்தே தன் இளைய மைத்துனியைக் கண்டு மனம் பதறப்பெற்றான்; உடனே பிரதி நமஸ்காரஞ் செய்து இருக்கைவிட்டெழுந்து "நீங்கள் ஏன் சிரமப்பட்டு நடந்து வருவான்? சொல்லியனுப்பினுல் நான் வரமாட்டேனே" என்று சொல்லிக்கொண்டு மடத்திற்குப் புறப்பட்டார்; சாமியம்மாளும் சாமியம்மாளுக்குப் பின்னே சுந்தராம்பிகையுஞ்செல்ல, சோமசுந்தரன் முன் நடந்தான்; சோமசுந்தரன் வந்திருப்பதைப்பற்றி முந்தி இராமன் சகோதரிகளிருவருக்கும் சொல்லிய போது, அவர்கள் தகப்பனர் விஷயமாகச் சோமசுந்தரன் சொன்னதைப் பிள்ளைகளுக்குச் சொல்லவில்லை. அந்த விஷயத்தைத் தான் சொன்னும் பிள்ளைகள் கவலைப்படுவார்கள். மைத்துனன் மூலமாக அவர்கள் அறிந்துகொள்ளட்டும் என்றெண்ணியே இராமன் சொல்லாமல் விட்டான். மூவரும் மடத்திற்கு வருவதற்கு முந்தியே அமிர்தாம்பிகை ஒரு மான்றோலை எடுத்துக்கொண்டு வந்து வாசலின் முற்புறத்திலுள்ள திண்ணையில் இட்டாள். அங்கே போனவுடன் சுந்தராம்பிகை மான்றோலைக்காட்டி "இப்படி இருங்கள்" என்று விநயத்துடன் சொல்ல, சோமசுந்தரன் மணவறையிற் கொண்டுவந்து இருத்தப்பட்ட பெண்பிள்ளைபோல் தலை குனிந்தபடி மான்றோலில் இருந்தான். அவனுடைய கண்களில நீர் ததும்பியது; அதனைக் கண்ட சகோதரிகளும் கலங்கினர்.

"கேள் தங்கைச்சி"

சுந்தராம்பிகை வாசலில் ஒதுங்கி நின்றாள்; அமிர்தாம்பிகை கதவண்டை மறைந்து நின்றாள்; "ஐயா அம்மா சுகமே யிருக்கிறார்களோ என்று கேள் தங்கைச்சி, என அமிர்தஞ் சொல்லச் சுந்தரம் அப்படியே கேட்டாள்; 'உங்கள் அம்மா சுகத்திற்கு ஒரு குறையுமில்லை; மாமனரில் இல்லை" என்று சோமசுந்தரம் கவலையுடன் சொல்ல, பிள்ளைகளிருவரும் மனங் கலங்கி "ஐயா எங்கே" என்று ஆவலுடன் வினவினர். "உங்களைப் பிரியாற்றாத மாமா நீங்கள் புறப்பட்டுச் சில நாட் செல்ல உங்களைத் தேடித் தானும் ஒரு வேலைக்காரனுடன் புறப்பட்டார்; இன்னும் அவர் மீண்டு அங்கே வரவுமில்லை; அவரிடமிருந்து ஏதுங் கடிதம் வரவுமில்லை" என்று சோமசுந்தரன் துயரத்தோடு சொல்ல, பிள்ளைகளிருவரும் பெரிதுங் கலக்கமடைந்தார்கள். அது கண்டு சோமசுந்தரன் "கவலைப்பட வேண்டியதில்லை; அவர் தனியே புறப்படவில்லை, ஆளோடுதான் புறப்பட்டவர்; இன்னும் உங்களைத் தேடித்திரிகிறார்; உங்களைச் சந்தித்திருப்பாரென்று நினைத்திருந்தேன்; அவரைத் தேடித்தான் நான் ஊரிலிருந்து புறப்பட்டேன்; எது விதத்திலும் தேடிக் காணுவேன், ஏன் கவலைப்படுவான" என்று ஆறுதல் சொன்னான். "எப்பொழுது ஊரிலிருந்து புறப்பட்டதென்று கேள் தங்கைச்சி" என்று அமிர்தாம்பிகை சொல்ல, "நான் ஊரைவிட்டுப் புறப்பட்டு இவ்வேழு பத்து நாளாகும்" என்று சோமசுந்தரம் பதில் சொன்னான். "இங்கே, எப்பொழுது வந்ததென்று கேள் தங்கைச்சி" என்று அமிர்தாம்பிகை வினவ, "இன்று காலையிற்றான் வந்தேன்" என்று சோமசுந்தரம் நேரில் விடை பகர்ந்தான். இதற்கிடையில் வாசலில் நின்ற சுந்தராம்பிகை உள்ளே போக, தமக்கை தடுத்து "ஏன் தங்கைச்சி உள்ளே போகிறீர்" என்று மெல்லக் கேட்க, "அத்தானுக்குத் தாகத்திற்காக ஏதும் கொண்டு வரப்போகிறேன்; அல்லாமலும் நீங்கள் இரண்டு பேரும் நேரே கதைக்கத் தொடங்கி விட்டீர்கள்; இனி இடையிலே நானொரு முதலியார் எதற்காக? அக்கா" என்று புன்சிரிப்புடன் மெல்லச் சொன்னாள்; அமிர்தம் நாணமுற்றவளாய் "இல்லை, கண்ணே, எனக்குத் தனியே கிறக வெட்கமாக இருக்கிறது; ஆச்சி அவருக்குக் காப்பி வைத்துக் கொண்டு வருவா; அவ்வளவு நேரமும் போய் அதிலே நில்லும்" என்று தங்கையின் முகத்தைத் தடவிச் சொல்லச் சுந்தரம் பழையபடி அந்த இடத்திற் போய் நின்றாள். இதற்கிடையிற் சாமியம்மாள் ஒரு பாத்திரத்திலே தண்ணீரும் இன்னொரு பாத்திரத்திலே காப்பியுங் கொண்டு வர, சுந்தராம்பிகை அவைகளைத் தான் வாங்கித் தன் மைத்துனன் முன்னிலையில் ஒதுங்கி நின்று வைத்துவிட்டு "தண்ணீர் இருக்கிறது கைகால் அலம்பிக் கொண்டு தாக சாந்தி செய்யுங்கள்" எனவும், சோமசுந்தரம் அப்படியே செய்தான். "இன்று பகல் எங்கே போசனஞ் செய்தது, எங்கே தங்கியிருந்தது என்று கேள் தங்கைச்சி" என்றாள் அமிர்தம்; "கோயிலுக்கு முற்புறத்திலே இருக்கும் மடத்திலே தங்கியிருந்தேன்; பிராமணர் வீட்டுச் சாலையிற் போசனஞ் செய்தேன்; அங்கே எனக்கு எல்லா வசதிகளுமுண்டு" என்று சோமசுந்தரன் விடை கூறினான். இதற்கிடையில் இராமன் பிராமணர்கடையில் வடை பட்சணங்கள் வாங்கிக்கொண்டு மடத்தினுள்ளே போனான். "இங்கே போசனஞ் செய்யும்படி அவர்களைக் கேள் தங்கைச்சி" என்று தமக்கை சொல்ல, "உங்களை இங்கே போசனஞ் செய்யட்டாம், அக்கா" என்று சுந்தராம்பிகை சொல்ல, "அதற்கென்ன, அப்படியே செய்கிறேன்" என்றான் சோமசுந்தரம். சிறிது நேரஞ் செல்லச் சாமியம்மாள் வந்து "போசனம் ஆயத்தம் அவர்களை உள்ளே அழைத்து வாருங்கள்" என்று தெரிவிக்க, சுந்தரம் "போசனஞ் செய்ய எழுந்திருங்கள்" என்று கேட்க உடனே சோமசுந்தரம் எழுந்து மடத்தினுள்ளே சென்றான். அதற்கு முந்தியே சமையலறையுட் சென்ற அமிர்தம் தங்கையைக் கூப்பிட்டு, "கண்ணே, ஆச்சியை உமது அத்தானுக்குப் போசனம் பரிமாறும்படி விடுவது சரியல்ல, நாங்கள் வந்த விடத்திற் புறக்கணித்து நடத்துகிறோமென்று மனமும் வருந்துவார்; ஆனதால் நீர் போய் நின்று பரிமாறும், கண்ணே, அதனால் ஒரு பிழையுமில்லை" என்று அமிர்தம் பரிவுடன் சொன்னாள்; "ஓம், அக்கா நான் பரிமாறுகிறேன்; நீங்கள் பரிமாறவில் நான் பார்த்தல்லவா பரிமாறவேண்டும்" என்று சொல்லி மெல்லச் சிரித்துக் கொண்டு சுந்தராம்பிகை தானே போய் நின்று சோமசுந்தரத்திற்குப் போசனம் பரிமாறினாள். சோமசுந்தரம் பத்து நிமிஷத்திற்கிடையில் தலைகுனிந்தபடி போசனஞ்செய்துவிட்டு, பின்னரும் சிறிதுநேரம் அம்மடத்தில் இருந்தான் பிறகு தன்மடத்திற்குப்போகவேணுமென்று விடை கேட்டான்; "இதும் மடந்தானே, இங்கேயும் தங்கலாந் தானே" என்று சுந்தரம் சொல்ல, "இல்லை, எனக்கு அங்கே எல்லா வசதிகளும் உண்டு; அல்லாமலும் அந்த மடத்தின் அறைத் திறப்பு இங்கே என்னிடத்தான இருக்கிறது" குறைநினைக்க வேண்டாம்" என்று சொல்லிக் கொண்டு எழுதலும் "நாளைக் காலைப் போசனத்திற்கு இங்கே வரும்படி கேள் தங்கைச்சி" என்று அமிர்தஞ் சொல்ல, "அப்படியே வருகிறேன்" என்று சோமசுந்தரம் சொல்லி அவர்களிடம் விடைபெற்றுச் சென்றான்.

—(வரும்)

தேகவியோகம்

பிரம்மஸ்ரீ க.ச. சுவாமிநாதக் குருக்களவர்கள்

யாழ்ப்பாணம் கந்தரோடைவாசரும் பரம்பரைக் குருமாரினரும் தமிழ் சமஸ்கிருதம் ஆகிய இருபாஷை விற்பன்னரும் வற்றுக்கரை விசுவநாத சிவாலய பரிபாலகருள் ஒருவரும் வல்லுவெட்டித்துறைச் சிவாலயத்திலும் (இப்பொழுது) சியர தெரு சித்திவிநாயகராலயத்திலும் தனித்தனி பலவருடங்களாக அர்ச்சகராகவும் குருத்துவம் வகித்தும் இருந்தவரும் ஆகிய பிரம்மஸ்ரீ கனகசபாபதிக் குருக்கள் சுவாமிநாதக் குருக்களவர்கள் சென்ற 27-10-41 திங்கட்கிழமை இரவு சடுதியாகத் தம்மைப் பீடித்த சுரநோய் காரணமாகத் தேகவியோகமாயினர். இவரது புத்திரர் பிரம்மஸ்ரீ சிவசுப்பிரமணிய ஐயர் அவர்கள் கந்தரோடைத் தமிழ் வித்தியாசாலையில் முதலாம் உதவியாசிரியராகவிருக்கிறார். கல்வி அறிவு ஒழுக்கம் தமிழபிமானம் தெய்வபக்தி சமயாபிமானம் ஆசாரசீலத்துவம் சுயநலங்கருதாமை முதலிய சுகுணங்கள்வாய்க்கப் பெற்ற குருக்களவர்களை எவருங் காத்திராப் பிரகாரம் இழந்து வருந்தும் மனைவி மக்கள் சுற்றத்தார் முதலாயினோருக்கு எமது அநுதாபம் உரித்தாகுக.

மேற்படி குருக்களவர்கள் சைவபரிபாலனசபையார் தொடங்கி நடத்தி வரும் குரு (சமஸ்கிருத) வகுப்பில் சபையாருடைய கேள்விப்படி ஓராசிரியராக இசைந்து ஆரம்பமுதற் சிலமாச காலமாகப் படிப்பித்து வந்தார், சபையார் சார்பாகவும் அவரது குடும்பத்தார்க்கு அநுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893.ம் ஆண்டின் 8.ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவுபிடிக்கும் யாழ்ப்பாணம் கரு. சித. சிதம்பரஞ் செட்டியார் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்பட வேண்டிய நகைகளின் விபரம்

நம்.	தி.	ரூ.	ச.	ஊர் பெயர் நகைகளின் விபரம்.
				1939.ம் ஆண்டு ஜுன் மாதம்
6756	7	170		நீராவியடி ச சரவணமுத்து இமி வெள்ளைக்கல் புரூச் 1ம் ஷை கல் பெண்டனுடன் சங்கிலி 1
				ஜுலை மாதம்
7117	17	220		இளவாலை ரு ச ருசைப்பிள்ளை இமி கல் முகப்புடன் செட்டிக் காப்பு சோடி 1
7118	17	135		இளவாலை ரு ச ருசைப்பிள்ளை தகட்டுச் செயின் 1
				ஆகஸ்ட்டு மாதம்
7411	17	10		இருபாலை சி நடராசா பௌத்திர மோதிரம் 1
				அக்டோபர் மாதம்
7929	11	4	50	கொக்குவில் ம ஐயாத்துரை இமிஒற்றைக்கல் கடுக்கன்சோ1
8012	25	8		பலாலி வெ தம்பியாம்பிள்ளை இமி வெள்ளைக் கல்தோடு சோ1
				டிசம்பர் மாதம்
8392	29	4		அராலி செ வேலுப்பிள்ளை இமி வெள்ளைக்கல் இளாவர் குச்சி சோடி 1
				1940ம் ஆண்டு ஜெனவரி மாதம்
8511	15	20		கந்தரோடை க ஆறுமுகம் அச்சுக் காப்பு 1
				பெப்ரவரி
8694	7	9		சங்கானை த ஐயாத்துரை சாதா காதோலை சோடி 1
8705	8	20		கோண்டாவில் க சேனாதிராசா காதுவைத்த ½ பவுண் காசு2
				மார்ச்
9028	19	8		வண்கிழக்கு சி குரும்பிள்ளை இமிவெள்ளைக்கல்தோடுசோ1
				ஏப்ரல்
9146	2	170		காங்கேசன்துறை ச கனகசபை முருச்சுக்குத்தி அட்டியல் 1 காட்டுக் கடுக்கன் சோடி 2
9472	9	120		இளவாலை பொ ஆறுமுகம் செடிவேலை செய்த முழுப்பவுண் கோத்த சங்கிலி 1
9525	16	15		வண்கிழக்கு ஆ ஏகாம்பரம் மிளகு காப்பு சோடி 1
9546	18	10		வண்மேற்கு சு சுவாமிநாதஐயர் மணுக்கன் கல் பதக்கம் 1
9621	26	148	50	வெள்ளாந்தெரு செ கந்தசாமி மாற்றுவிட்ட சில்லரை உருப்படியுடன் பின் கொக்கி இல்லாத ஒட்டுக் கொடி 1
9622	27	7		குப்பிளான் வீ ராமநாதர் இளகாய்க் கடுக்கன் சோடி 2
				ஜுன்
9750	8	12		வண்கிழக்கு சு மயில்வாகனம் இமி வெள்ளைக்கல் தோடு சோடி 1
9771	10	10		வண்கிழக்கு பெ பழனிவேலு பச்சைக் கல் மோதிரம் 1 இமி கல் மோதிரம் 1
9776	10	10		அராலி ஆ சிவசுப்பிரமணியம் பெட்டி மோதிரம் 1
9917	27	80		உரும்பிராய் சி பொன்னையா கம்பிப்பூரான் அட்டியல் 1
				ஜுலை
9996	8	15		வண்மேற்கு சு சுவாமிநாத ஐயர் இமி கல் பதக்கத்துடன் நெற்றிச் சுட்டி 1 கொண்டைப்பூ 1
10071	17	4		கொக்குவில் க அப்புத்துரை பழுது ஒன்றவர் மோதிரம் 1
10091	19	5		மானிப்பாய் வி கனகசபை K. N. விலாசம்போட்ட ஆம தன் மோதிரம் 1
10183	29	6		வட்டுக்கோட்டை வ துரைசிங்கம் பழுது உலாந்தா வயிரச் சன்னம் 8 கட்டிய ஐம்பொன் கொண்டைப் புரூச்சு 1
10195	30	2		கன்னாதிட்டி க துரைராசா அச்சரத் தகடு 1
				ஆகஸ்டு
10238	7	4		மண்டைதீவு க சுப்பிரமணியம் இமி கல் காப்பின் முகப்பு 1
10253	8	3		வண்கிழக்கு ந தங்கரெத்தினம் சாதா காதுப்பூ சோடி 1
10350	26	8		ஆவரங்கால் அ அன்னம்மாப்பிள்ளை தாலி 1
10360	26	95		காங்கேசன்துறை ச கனகசபை குண்டுச்சங்கிலி 1 தாலி 1 காது வைத்த கோட்டை அரைப்பவுண் காசு 1

விற்பனவு நிகழும் விஷு வருஷம் ஐப்பசி மாதம் 30-ந் தேதி (15-11.41) சனிக்கிழமை காலை 9 மணியளவில் எடுபட்டநகை பிறநீக்கலாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை
வெந்திஸ்மேஸ்தர்

Mis 121 30.10-41 & 3-11-41

அடைவுநகை விற்பனவு விளம்பம்

1893.ம் ஆண்டின் 8.ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்கிழக்கு மு. ரும. மு. சே. சேவுகஞ் செட்டியார் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12.ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்பட வேண்டிய நகைகளின் விபரம்.

நம்.	உ	ரூ.	சதம்	ஊர் பெயர் நகை விபரம்
				1940ஆ பெப்ரவரி மீ
7304	12	20		வண்கிழக்கு கா. குழந்தைவேலு வேலாயுதம் 1
7343	15	15		கோண்டாவில் மு. ஆறுப்பிள்ளை காட்டுக்கடுக்கன் சோடி 1
7347	17	200		புத்தூர் வே. செல்லப்பா மாலைப் பதக்கத்துடன் குண்டுச் சங்கிலி 1 மாலைப்பதக்கம் 1 சிறு பதக்கம் 1 செயின் 1
7460	26	10		வண் கிழக்கு இ. இராமசாமிப்பிள்ளை திருமாங்கல்யம் 1
				மார்ச்சு மீ
7565	6	60		தட்டாதெரு வி. சிதம்பரப்பிள்ளை மிளகுக்காப்பு சோடி 1
7670	16	33		கொக்குவில் கிழக்கு க. சின்னத்துரை பெட்டி மோதிரம் 1
7711	11	60		அத்தியடி வே. கந்தையா அச்சுக்காப்பு சோடி 1
				ஏப்ரல் மீ
7967	17	18		கலட்டி வி. தம்பிப்பிள்ளை இமி கோட்மோதிரம் 1
7977	18	8		கலட்டி சு. கணபதிப்பிள்ளை மஞுக்கன் காதோலை சோடி 1
7987	18	230		மானிப்பாய் வ. சுந்தரம் முறிச்சுக்குத்திக் கொடி 1
8068	28	10		கொக்குவில் க. மயில்வாகனம் குண்டுவைத்த அரைப்பவுண் 1
				மே மீ
8141	6	25		வண்கிழக்கு சு. வயிரமுத்தன் இள தகட்டுடன் அஷ்ரக்கூடு 1 வெள்ளைக்கல் தோடு சோடி 1 இளாவர்க்குச்சி சோடி 1
8166	8	10		உடுவில் கா. சோமு வளையல் காப்பு சோடி 1
8211	13	24		வட்டுக்கோட்டை இ. மு. அருணாசலம் கல்மோதிரம் 1 அரும்புத்தடை 2
8278	19	16		நல்லூர் சி. சின்னையா இமி கல்தோடு சோடி 1
8392	30	20		பெரியகடை கா. கணபதிப்பிள்ளை இமி பதைக்கம் 1
				ஜுன் மீ
8418	2	20		தெல்லிப்பழை வை. பொன்னையா திருமாங்கல்யம் 1
8594	18	6		நாவடி ச. கணபதிப்பிள்ளை இள காட்டுக்கடுக்கன் 1
8603	19	40		சங்கானை செ. கந்தையா கல் கட்டிய கவுத்தோர் 1 தோடு சோடி 1
8681	26	16		வண்கிழக்கு ஆ. இராஜேந்திரம் கெளிக்காப்பு 1
8699	28	35		முல்லைத்தீவு சி. மயில்வாகனம் கல்புரூச்சு 1 கல்கவுத்தோர் 1
8706	29	120		புத்தூர் வ. தம்பையா முறிச்சுக்குத்திக் கொடி 1
				ஜுலை மீ
8751	3	15		வண் கிழக்கு ஆ. இராஜேந்திரம் கெளிவளையல் 1
8752	3	240		இணுவில் வை. தாமோதரம்பிள்ளை இமி தோடு சோடி 1 மோதிரம் 2 அஷரக்கூடுடன் சங்கிலி 1 முகப்புடன் முப்புரிக் கொடிசு 1
8815	8	240		பிராம்பத்தை மு. சின்னத்தம்பி குண்டுதடை பதி காலுடன் பட்டை முறிச்சிக்குத்தி தாலிக்கொடி 1
8827	10	95		சுண்டிக்குளி அ. யோசேப்பு டிம்மியுடன் மின்னலட்டியல் 1
8836	10	6		கவாலி வே. சுப்பையா திருமாங்கலியம் 1
8880	14	40		சோனகதெரு ப. சாகுல்ஹமீது இள அல்க்கொத்து 10ம் கோதுக்கொடி 1
8947	18	10		பெருமான்கோவிலடி மு. வேலுப்பிள்ளை பளிங்குக்கல் மோதிரம் 1
9010	25	115		பெரியகடை கா. கணபதிப்பிள்ளை கெட்டிப்பூரானட்டியல் 1 கல்கவுத்தோர் 1
9012	25	15		அடியூர் அடியார் கடுக்கன் சோடி 1
9068	31	27		கொக்குவில் ஆ. கனகசபை இமி புரூச்சு 1

விற்பனவு 17.11.41 திகதிக்குச் சரியான விஷு வருஷம் கார்த்திகை மீ 2-ந் திகதி திங்கட்கிழமை காலை 9 மணியளவில் எடுபட்ட நகை பிறநீக்கலாக மிகுதி மேற்படியார் கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வெந்திஸ் மேஸ்தர்
சி. ஐயம்பிள்ளை

Mis 120 30.10.41&3-11-41

வெள்ளவத்தை
ஸ்பின்னிங் அன் வீவிங் மில்ஸின்
புடைவைகள்
இப்போது யாழ்ப்பாணத்திலெவ்வொருவீட்டிலும்
பேசப்படும் வார்த்தைகளாம்
ஒருமுறை பரீக்ஷித்தால்—
எப்போதும் விரும்பப்படுவது.
ஒவ்வொருவிதமான தினிசிலும் நாம் புடைவைகளைச் செய்கிறோம்.

வேட்டிகள்
சால்வைகள்
சேலைகள்
சாரங்கள்
கம்பாய்கள்
துவாய்கள்
லோங்குளோத்ஸ்
மல்லுகள்
பெட்ஷீட்டுகள்
டிரில்லுகள்
சூற்றுணிகள்
ரசூர்கள்
'ஷேட்' துணிகள்
ஷீட்டுகள்
பஞ்சணைஉறைகள்
மேசைத்துணிகள்
பப்ளின்கள்
யன்னல்துணிகள்

முதலிய இன்னும்பல எம்மிடம் உண்டு.
எங்கள் சில்லறைக் கடைக்கு வாருங்கள்.
பெரியகடை, யாழ்ப்பாணம்.
வெள்ளவத்தை ஸ்பின்னிங் அன் வீவிங்மில்ஸ்,
(இந்தியாவில் ஸ்தாபிதமானது):
(அங்கத்தவரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)
Mis 127. 11-10-40—

"காயகல்ப"
அனுகூல சிகிச்சை
காயசித்தி, தத்துவக்குறைவு, சலரோகம், வாதம், சிறுபிள்ளை வாதம், வலி, தோற்புரை வியாதிகள், குட்டம், ஆதியாம் நோய்களுக்கு அநுகூலமான சிகிச்சை.
மேகராசா
சலரோகம், நீரழிவு ('அல்புமென்' அடையல், புளித்திராவகம், அதிக நீரழிவு ஆகிய எந்தநிலையிலிருப்பினும்) க்குக் கைகண்டமருந்து. பத்தியம் இல்லை. 15 நாட்களுக்குக் காணக்கூடிய போத்தல் ஒன்றுக்கு விலை ரூபா 4.00.
சுண்டிக்குளித்தபாற்சுத்தோர்த் தலைவர்பினவருமாறெழுதுகிறார்:-
நீரழிவுக்குரிய உங்கள் மேகராசா என்னும் மருந்தை நான் ஒரு மாசமாக உபயோகித்தேன். என் சலம் சுத்தமாகி விட்டது. இந்தச் சிகிச்சைக்காக உங்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.
இங்ஙனம்,
P. நடராஜா.
பின்வருவோரைக் கலந்தாலோசியுங்கள்:—
டக்டர் K. T. மங்களம்
R. I. M. P.
(சென்னை)
M. S. V. S. அங்கத்தவர்,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
Q 82 7-8—6.11.41

600 வருஷப்
பழமை வாய்ந்தது
பெரிய வைத்தியர் ஒருவரின் ஏட்டிலிருந்து காணப்பட்ட பழைய வைத்திய முறையின்படி புத்தகுரு ஒருவரால் ஒரு மலைக்கோவிலில் இப்போது தயாரிக்கப்படும் 'நேத்திர ரத்தின தைல'முறை 600 வருஷப் பழமை வாய்ந்தது.
"நேத்திர ரத்தின தைலம்" பலநோய்களை மாற்றவல்ல புகழ்பெற்ற எண்ணெயாகும்.
நேத்திர ரத்தின தைலம் நோய்களை
மாற்றப் பேர் பெற்ற
மருந்தெண்ணெய்
இந்தத் தைலத்தை ஒழுங்காகப் பாவித்து வந்தால் கண்குத்து, நீர்வடிதல், கண்சிவப்பு, கண்வலி, ஜலதோஷம், நரம்புவலி, தலைவலி முதலிய நேத்திரத்துக்கும் தலைக்கும் சம்பந்தமான எல்லா வியாதிகளும் சொஸ்தமாகும். கண்பார்வை குன்றியவர்களுக்கும் சமீபபார்வை, தூரப்பார்வை யற்றவர்களுக்கும் இத்தைலம் ஓர் அருஞ் சஞ்சீவியாகும். இது சூழேலுக்குக் குளிர்ச்சி யளித்துக் கண்நோய்கள் உண்டாகா வண்ணம் தடுக்கும்.
குறிப்பு: இந்த எண்ணெய் மயிர் வளருகிறதற்கு உத்தரவாதமுடையது.
விலை ரூபா. 2/50
ஏஜெண்டுகள்:- எஸ் மால்ஜீ அமிஜீ
பெரியகடை, யாழ்ப்பாணம்.
Q 115 23.10.41—22-1.42

குயீன்பிரண்ட் (அரசி அடையாள) ஓடுகள்
குறைந்த விலை நிறைந்த குணம்
எங்கும் பெயர்பெற்ற, உறுதிவாய்ந்த
ஊறுத, நல்ல சத்தமுள்ள
யாவரும் விரும்பும் அழகிய ஓடுகள்.
இ. சுந்தரமூர்த்தி, (Sole Agent)
பெரியகடை, யாழ்ப்பாணம்.
c/o S. Veeragathipillai & Sons.
(Y. 21- 11-8-40—10-8-41.) வி

S. S. C. பரீக்ஷை இலக்கியம் (1942)
பாரதம்-கிருஷ்ணன்றூது சருக்கம்
மூலமும் உரையும்
பல வருடங்கள் J. S. C.; S. S. C. பரீட்சை இலக்கியங்களுக்கு விசேடமாகிய உரைநூல்கள் இயற்றி வெளியிட்டவரும், பண்டித, பாலபண்டித; பரீட்க்ஷை வகுப்புக்களுக்குப் போதித்த அநுபவம் வாய்ந்த இயற்றமிழ்ப் போதகாசிரியரும், வண்ணார் பண்ணை-நாவலர் வித்தியாசாலைத் தலைமையாசிரியருமாகிய திரு. வித்துவான், ந. சுப்பையாபிள்ளை அவர்கள் மேற்படி பரீட்சைக்காகிய முறையில் இயற்றிய விசேட விரிவுரையுடன் அச்சிடப் பெற்றுள்ளது.
பிரதி எம்மிடத்திலும் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.
பிரதியொன்றன் விலை ரூபா 1 சதம் 10
தொகையாக வாங்கும் ஆசிரியர்களுக்கும் வியாபாரிகளுக்கும் தக்க கழிவு கொடுக்கப்படும்
இந்துசாதனம் 20.8-40
மனேஜர்.

தலைமையுரை

(முதலாப்பக்கத் தொடர்ச்சி)

இயலாததாதலின், முற்றுணர்வுடைய இறைவனே அது செய்தல் வேண்டும் என்பது பெறப்பட்டது. ஆதலின், சிவஞானபோதம் முதற்கண் கல்லாலின்நிழலின் வீற்றிருக்கும் ஆதிகுருவாகிய சிவபெருமானே அருளிச் செய்ததென்பது குருமரபின வந்தோர் துணிபாம். சித்தாந்தமென்ற பெயர் சிவாகமங்கட்கேயுரியது. அது "சிவாகமங்கள் சித்தாந்தமாகும்" என்னும் சித்தியார் திருவாக்கும் உணர்த்தும். எனவே, சிவாகமங்களாகிய சித்தாந்தத்தின் பொருளை நிச்சயித்துரைக்கும் சிவஞான போதத்தைக் குருமரபால் பெற்று விளக்கியருளிய அருட்குரவர் ஸ்ரீமெய்கண்டசிவனாராவர்; ஆதலின், அவர் அருளிச்செய்த சித்தாந்தமாகிய சிவஞானபோதமும் அதன் வழிநூல் சார்புநூல்களும் மெய்கண்ட சித்தாந்தம் என வழங்கப்பெறும். இந்த மகாநாடு மெய்கண்ட சித்தாந்தமாகிய சிவஞான போதத்தைப் பற்றிய ஆராய்ச்சி உரைகளை யாமெல்லாம் கேட்டு மெய்யுணர்வு பெறுதற்பொருட்டுத் திருக்கைலாயபரம்பரை மெய்கண்ட சந்தானத்தின் வந்த திருத்தருமையாதீனத்துக் குருஞானசம்பந்த மூர்த்திகளின் திருமரபில் இருபத்து நான்காவது குருமூர்த்திகளாய் இங்கே எழுந்தருளிய ஸ்ரீலஸ்ரீ சண்முகஞானதேசிகசுவாமிகளால் கூட்டுவிக்கப்பட்டது. ஆதலின், இந்த மகாநாடு "மெய்கண்டான் சித்தாந்த மகாநாடு" எனப் பெயர்பெற்றது மிகவும் பொருத்தமுடையதே.

மெய்கண்டதேவர் குருமரபால் சிவஞான போதத்தைப் பெற்றுத் தமிழில் மொழிபெயர்த்தருளினர் என்பது "முன்னுள் இறைவனருள் நந்திதனக் கியம்பநந்தி, கோதிலருட் சனற்குமாரர்க்குக் கூறக் குலவத்தின் அவ்வழியெங் குருநாதன் கொண்டு, தீதகல எமக்களித்த ஞானநூல்" என அருணந்திசிவாசாரியார் அருளியதனால் தெளியப்படும். இப்பாடலில் எமக்கென்றது தமிழ் மக்களாகிய நம்மவர்க்கு என்பது பொருள். ஆதலின், தமிழ் மொழியால் அருளிச் செய்தாரென்பதும், "இயம்ப" கூற, கொண்டு, அளித்த ஞானநூல் என்பதனால் இயம்பியதும் கூறியதும் வாக்கியத் தொடரால் ஆக்கப்பட்ட நூலேயாம் என்பதும் பெறப்படும்.

இனி ஆசிரியர் மெய்கண்ட சிவனார்க்குப் பரஞ்சோதி முனிவர் உபதேசஞ் செய்ய, அவ்வுபதேச மொழியையே நூலாகச் செய்து தந்தாரென்றும், வடமொழியில் நூல் மெய்கண்டார்க்கு முன் இல்லை என்றும் இக்காலத்துக் கூறுவாருமுளர்; வடமொழிச் சிவஞான போதத்தை மெய்கண்ட சந்தான குரவராகிய ஸ்ரீமத் உமாபதி சிவனார் தாமருளிய பௌஷ்கரவிருத்தியில் ஐந்திடங்களில் பிரமாண நூலாக உதாரணங் காட்டுதலானும், அவ்வாசிரியர் காலத்துக்கு அடுக்கவிருந்த சதாசிவ சிவாசாரியர் வடமொழிச் சிவஞான போதத்துக்கு அம்மொழியில் உரைசெய்து நூல் வரலாறு கூறுவதானும், சிவாக்கிர யோகிகள் இந்நூலுக்குப் பாடியம் செய்திருத்தலானும், அப்பய்ய தீக்ஷிதர் சிவார்க்கமணி தீபிகையில் இரண்டாஞ் சூத்திரத்தை எடுத்து உரைத்தலானும், ஞானப்பிரகாச முனிவர் தென்னியம்பலவாண முனிவர் முதலியோர் வடமொழி வல்லுனரெல்லாம் உரைசெய்தும் உதாரணமாக எடுத்தாண்டும் பிரமாணமாகக் கொள்ளுதலானும், உலகுடைநாயனார் "அருட்டுறை யண்ணல் மொழிபெயர்த் தருணூல் முதலா மூன்று நூற்கருத்தும்" என மொழிபெயர்ப்பென்பதைக் கிளந்துரைத்தலானும், இங்ஙனமே திராவிட மாபாடியம் வகுத்த ஆசிரியர் சிவஞானயோகிகள் சூத்திரக்கோளும் "இங்ஙனம் பாடத்தை மொழிபெயர்த்துக்கொண்டு" என்று விரித்துரைத்தலானும் இவ்வாறு மெய்கண்ட சந்தான குருமரபின் வந்த ஆசிரியன்மாரெல்லாரும் ஒரேமுகமாகக் கூறிவரும் உண்மையை அல்லாதார் இல்லை என்பது பொருத்தமாமா என்பது அறிஞர் ஆராயத்தக்கது.

இனி, தமிழ்ச்சிவஞானபோதத்தில் உள்ள நயம் வடமொழிச் சிவஞான போதத்துக்கு இல்லையெனக் கூறுவாருமுளர். வடமொழியிலும் செந்தமிழிலும் நிரம்பிய பெரும்புலமை வாய்ந்த அருளாளர்களாகிய ஸ்ரீமத் உமாபதிசிவனார், சிவாக்கிர யோகிகள், அப்பய்ய தீக்ஷிதர், திராவிட மாபாடியகாரர் முதலிய தொல்லாசிரியரெல்லாரும் இருமொழி நூற்கும் ஒரே பொருள் கண்டு ஒற்றுமைப்படுத்தி உபதேசித்தருளுதலால் தமிழ் நூலுணர்ச்சி பெற்றமேயுடையார் இது நயமுடையது இது நயமில்லாதது என்று கூறுவதன் பொருத்தம் அறிஞர் ஆராயத்தக்கது.

இனி, அவர் கூறுபவற்றுள் இரண்டொன்று இங்குக் காட்டப்படும். தமிழ்ச் சிவஞானபோத முதற் சூத்திரத்தில் "அவனவளதுவெனும்" என்று கூறியிருக்க, வடமொழிச் சூத்திரம் "பெண்ணணலி பாதி" என்று கூறுவது நயமில்லை என்பர். "பெண்ணாணலியாகு மவியாய்" என்பது முதலாகத் திருமுறைகளில் வருவன பலவும் நயமிலவென்று கொள்ளலாமா? "அன்னையும் பிதாவும்" "அம்மையே யப்பா" "அம்மையப்பரே உலகுக் கம்மையப்பர்" என்பனவும் இங்குச் சிந்திக்கத் தக்கன; "எனும்" என்னும் தமிழ்ச் சூத்திரவாக்கியத்துக்கும் "இதி என்னும்" வடமொழிச் சூத்திரவாக்கியத்துக்கும் பொருள் ஒன்றே என்பது திராவிட மாபாடியகாரர் விளக்கியருளினர்.

இனி, "மூவினைமையின்" என்ற தொடரின் பொருணயம் "கார்யதர்சநாத்" என்ற வடமொழிச் சூத்திரப் பகுதிக்கு இல்லையெனபர். கர்த்தாவுண்மையைச் சாதிப்பதற்கு கார்யம் என்ற சொல் சிறந்த சாதனமாம் என்பது உமாபதிசிவனார் பௌஷ்கரத்தில், "கார்யபதந்து த்ருஷ்டாந்தே சாதனவைகல்ய சங்கா பரிகாராய" என்று கூறியதும் பற்றியறியப்படும். இதன்பொருள்: "கார்யமென்னுஞ் சொல் திருஷ்டாந்தத்தில் சாதனக் குறைவு பற்றிய ஆசங்கையை நீக்குதற் பொருட்டு" என்பதாம்.

இனி, மலத்துளதாம் என்ற சொற்றொடர் வடமொழிச் சூத்திரத்தில் இல்லை என்பர். இதனைத் திராவிட மாபாடியகாரர் முதற் சூத்திர பாடியமுடிவில், "அற்றேல் வடமொழி முதற் சூத்திரத்தில் மலத்தால் என்பது இல்லையாலோ வெனின், அற்றன்று; காலம் பாதத்தில் இதனால் என்பது (அன்மாத்) மலத்தால என்னும் பொருட்டு; ஆண்டுச் சிருட்டிப்பன் இதனால் என்பதை இதனால் சிருட்டிப்பன் என மாறிப் பொருள் உரைக்க; அற்றேல் சுட்டுப்பெயர் முன்வந்த தனைச் சுட்டுவதாகலின் அங்ஙனம் வாராத மலத்தைச் சுட்டுமாறு என்னையெனின், அற்றன்று; சுட்டுப் பெயர் முன்வந்ததனையே சுட்டும் என்னும் நியமம் செய்யுளுக்கின்மையானும், குறிப்பது சூத்திரமாகலானும் காலஞ் சூத்திரத்து வருவதனை ஈண்டுச் சுட்டுப் பெயரால் குறிப்பித்தாரெனக் கொள்க; இஃதுணராதார் இதனால் என்பதற்கு 'இங்ஙனமாகலின்' எனப் பொருளுரைப்பர். அது கூறாமையே பெறப்படுமென்றொழிக; அற்றாகலின் அன்றே ஆசிரியர் இங்ஙனமாகலின அந்தமாதியென்று ஓதாது வாளா கூறியொழிந்ததூஉமென்க" என்று தமிழ்மொழி வடமொழிச் சூத்திரங்கட்கு ஒற்றுமைப்பொருணயங்காட்டி மேல்வருஞ்சூத்திரங்களிலும் அவிரோதநயனம் செய்தருளுகின்றார்.

—வரும்.

திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரையறுத்தது)
அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.
ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா 25ம் ஆதாயமும் பெறலாம்
வங்கித்தொழிலும் வியாபாரமும்
இலாபகரமாய் நடக்கின்றன.
தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.
இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும்
நிரந்தமாயும், சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்வோம்.
பங்குகளுக்கு முந்துங்கள்!
வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.
(வி) (Y. 22. 1-11-40 to 31-10-41)

திருச்சி
ரேடியோ நிகழ்ச்சி
(396 மீ)

[இசைத் தட்டுகள் †]

வெள்ளி அக் 31

காலை 7-30 கீதாரம்பம் † 7 40 தமிழில் செய்திகள் 7-50 தூரான்-இ-ஷரீப் 8-30 இஸ்லாம் துதிகள் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 சங்கீதம் † 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 நக்ஷத்திரங்கள் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 எச். எஸ். மச்வாச்சார் கோட்டுவாத்தியம் 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 ஸ்ரீமதி ஜி. சென்னம்மா பாட்டு 5-15 அ. இ. ரே. வாத்யகோஷ்டி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 6-30 தம்பகாணம் வி. சிவசுப்பிரமண்யபிள்ளை நாகஸ்வரம் 7-15 இலக்கியவாசகம் 7-30 கோவில் காளை 7-45 தமிழில் செய்திகள் 8-00 தம்பகோணம் வி. சிவசுப்பிரமண்யபிள்ளை நாகஸ்வரம் 8-30 உலக விவகாரங்கள் 8-45 ஸ்ரீமதி. ஜி சென்னம்மா பாட்டு 9 20 ஆங்கிலத்தில்செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகளும், சொற்பொழிவும் 10-00 ஒலிபரப்பு முடிவு.

சனி நவ 1

காலை 7-30 கீதாரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 திருமொழி விளக்கம் 8-00 பஜனை 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 தோத்திரப்பாடல்கள் † 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 படப்பாட்டுகள் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 ஸ்ரீமதி டி. என். சங்காபாய் பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கதம்பம் † 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5 00 ஸ்ரீமதி டி. என். சங்காபாய் பாட்டு 5-45 லீலா சிட்னிஸ் † 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 6-30 மதராஸிலுள்ளபடி (ஜெமினி வாத்தியகோஷ்டி) 7-00 செய்திக் கடிதம் 7-15 தாளவாத்தியக் கச்சேரி 7-30 அறிவிப்புகள் 7-45 தமிழில் செய்திகள் 8-00 மதராஸிலுள்ளபடி எம். எஸ். சுப்புலக்ஷ்மி பாட்டு 9-15 இருதாலிசை † 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகளும், சொற்பொழிவும் 10-00 ஒலிபரப்பு முடிவு.

ஞாயிறு நவ 2

காலை 7-30 கீதாரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 தேவாராதனை 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 அம்பிகாபதி † 9-00 ஒலிபரப்பு முடிவு

12-00 பிடித்த பாட்டுகள் † 12-30 ஒலிமலர் மலர் 1 இதழ் 29 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 கே. வ. ராதாகிருஷ்ணபிள்ளை பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 குமாரி கமலா, குமாரி நாகம்மா பாட்டு 2-30 ஒலிபரப்புமுடிவு

மாலை 5-00 குமாரி கமலா, குமாரி நாகம்மா பாட்டு 5-45 வானொலி வாத்திய கோஷ்டி 6 00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 6-30 கே. வ. ராதகிருஷ்ணபிள்ளை பாட்டு 7-15 நடைமுதல் நிகழ்ச்சி 7 50 அறிவிப்புகள் 7-45 தமிழில் செய்திகள் 8-00 கே. எஸ். நாராயணஸ்வாமி ஐயர் வீணை 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகளும், சொற்பொழிவும் 10-00 ஒலிபரப்பு முடிவு.

திங்கள் நவ 3

காலை 7-30 கீதாரம்பம் † 7-40 தமிழில் செய்திகள் 7-50 ஏ கே. ராஜநாயுடு நாகஸ்வரம் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 நூல் வகைகள் † 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 திரைகளிலிருந்து † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 ஆர். சங்காலிங்கம் பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 ஏ. கே. ராஜநாயுடு நாகஸ்வரம் 5-45 இசைப்பயிற்சி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கிராம நிகழ்ச்சிகள் 6-30 ஆர். சங்காலிங்கம் பாட்டு 7-15 செய்திச் சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-45 தமிழில் செய்திகள் 8-00 பி. எஸ். ராஜாஐயங்கார் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகளும், சொற்பொழிவும் 10.00 ஒலிபரப்பு முடிவு.

விசேஷ அறிவித்தல்
சம்பூரண கைரேகை பலன், ஆருடம் (சிந்தனை சாஸ்திரம்) முதலிய சாஸ்திர சம்பந்தமான எல்லா விஷயங்களையும் கீழ்க் காண்பவரிடம் அறிந்து கொள்ளலாம்.
கிரகஸ்புடம், தச வர்க்கம், அஷ்டவர்க்கம், பாவநிலை முதலிய கணித வகைகளும், மகா தெசா புத்தி பலன், துவாதச பாவபலன், கோசரபலன், கால சக்கரபலன் முதலியன அடங்கிய பெரிய ஜாதகம் எழுத ரூபா 10/—
நா. சின்னத்துரை
போக்கத்தை,
கைதடி வடக்கு, கைதடி.
Y 67 20-7.41—19.7.42

பத்திரக்கிரயம்
வருஷம் ஒன்றுக்கு யாழ்ப்பாணப்பட்டினத்துக்கு [illegible] தமிழ் ரூபா 5-00 இந்தியாவுக்குத் தபாலுடன் 9-00
இலங்கை இந்தியா 8.00 [illegible] 12.00
தொலைவு பகுதி 9.00 [illegible] 13-00
தனிப்பிரதி சதம் 5
முற்பணமாக
அனுப்பப்படல் வேண்டும்

நம் தமிழ்நாடு வேண்டும் நங்கையர்

1 -ம் பக்கத்தொடர்ச்சி

மாகும். உண்மையான காதல் புணர்ச்சியை மாத்திரம் குறிக்கோளாகக் கொண்டதன்று. அது உயிரிலும் உடலினும் கலந்து ஒன்றியிருக்கும். காதலைக்குறித்துச் சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் கூறிய விழுமிய அறிவுரையை எடுத்துத் தருகின்றேன். "உண்மையான காதல் வேகத் திடீரென்று தோன்றுது; அப்படித் தோன்றுவது கேவலம் உடல் வேகந்தான். உள்ளத்தில் உண்டாகும் உணர்ச்சியெல்லாம் புத்தகத்தில் படித்த காதலென்று எண்ணுதீர்கள். அடக்கிப் பார்த்து, மறந்து பார்த்து, மாற்றிப் பார்த்துப் பிறகுதான் தீர்மானிக்க வேண்டும்" என்பது அது. மணமென்பதைப் பலர் விளையாட்டு வேடிக்கை போலவுங் கருதுகின்றார்கள் என எண்ணவேண்டியிருக்கிறது. இக்காலத்தில பொருந்தாத விவாகங்களையும் முடித்து வைப்பதிலிருந்து ஒருவனை உயர்ந்த நிலையில தூக்கி வைப்பதும் மிகவுங் கீழ்ப்படுத்தித் தாழ்த்தி வைப்பதும் மணத்தின் பண்பு என்பதை ஆடவரும் நங்கையரும் மறந்துவிடக்கூடாது. ஆடவனதும் நங்கையினதும் மனக் கருத்து ஒத்திருந்தபோது அவர் விருப்பப்படியே மணத்தை நிறைவேற்றி வைத்தலே பெற்றோரதும் பெரியாரதும் கடனாகும்.

இக்காலில், பணமொன்றையே பெரிதாகக் கருதி மன இயைபு இல்லாத ஆடவரையும் நங்கையரையும் கூட்டி வைப்பதால் விளையுங் கேடுகள் பல. ஒரு பெரியார் தனது மகளுக்கு மணஞ் செய்து வைக்கத் தீர்மானித்தபோது கூறியதாவது:- "எனது மகள் பணமில்லாத மகனை மணக்க உடன்பட்டாலும் மகனில்லாத பணத்தை அவளுக்குக் கூட்டி வைக்க நான் ஒருபோதும் உடன்படேன்" என்பது. எத்தனை பெரியோர் இவ்வாறு தம்மகளுக்கு மகனை பேசுகின்றனர்] மகன், மகள் என்ற சொற்களின் பொருளை நாம் அறிய வேண்டும். "மாவும் மாக்களும ஐயறிவினவே" என்றும் "மக்கள் தாமே ஆறறி வுயிரே" என்றும் தொல்காப்பியர் கூறுமாற்றால் பகுத்துணர்ச்சியை யுடையாரே மக்களாவார் எனவும் மகன், மகள் என்பனவும் பகுத்துணர்ச்சியை உடையாரையே குறிக்கும் எனவும் நாம் தெளிய வேண்டும்.

மனம் ஒருமித்த ஆடவனும் நங்கையும "அன்பும் மடனும் சாயலும் இயல்பும், என்பு நெகிழ்க்குங் கிளவியும் பிறவும், ஒலையுபடு கொள்கையொடு பாராகுதுமுயங்" குகின்றார். ஈண்டு அன்பென்றது ஒருவர் ஒருவரை இன்றி அமையாமை. மடன் என்றது ஒருவர் குற்றம் ஒருவர் தெரியாமை. சாயல் என்பது மென்மைத் தன்மை. இயல்பு என்றது ஒருவர்மேலொருவர் சந்தேகம் கொண்டு ஒளித்தொழுகாமை. என்பு நெகிழ்க்குங் கிளவி என்றது உடலின் வலிதாகிய எலும்பையும் நெகிழ்விக்கும் ஆர்வமொழி. கலந்தோர் இருவரும் ஒருவருள்ளத்து ஒருவர் நிறைந்து விடுதலின் ஆடவன் பிற நங்கையரைக் காணினுங் காணாத நிலைமையையும் அவ்வாறே நங்கையும் பிற ஆடவரைக் காணினுங் காணாத நிலைமையையும் எய்தி விடுகின்றனர். இவ்வுண்மையை மணிவாசகப் பெருமான் "மீண்டார் என உவந்தேன் கண்டு அம்மை இம் மேதகவே, பூண்டார் இருவர் முன்போயினரே? புலிப்பூண்மலைசென்று, ஆண்டான் அருவரை ஆளி அன்னானைக் கண்டேன் அயலே, துண்டா விளக்கனையாய்! என்னை யோ அன்னை சொல்லியதே?" என்று திருச்சிற்றம்பலக் கோவையாரில் சித்திரித்துக் காட்டியிருக்கின்றார். இந்நிலையே கற்புநிலை. மனமொத்தாரிருவர் காதலினால் எய்துங் கற்பே திண்மையும் சிறப்பும் உடையதாகும். "கற்பெனப்படுவது களவின் வழித்தே" என்று இறையனார் களவியலிலும், "காதற் காமங் காமத்துச் சிறந்தது, விருப்போர் ஒத்து மெய்யுறு புணர்ச்சி" என்று பரிபாடலிலும் கூறப்படுவதை நோக்குக. கற்பு எய்திய நிலையிலே தெய்வப்புலவர் "பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந், திண்மையுண்டாகப் பெறின்" என நங்கையரை வியந்து புகழுகின்றார். இயற்கையிலேயே ஆடவரினும் ஒழுக்கங் காத்தலை இன்றியமையாதவர் நங்கையர். அவரிடத்தினவாம் அச்சம், நாணம், அமைதி என்பன போன்ற குணங்கள் அந்நிறைகாப்பிற்குப் பெரிதும் பயன்படுவன. [இதனால் ஆடவர் ஒழுக்கங் காத்தலை இன்றியமையாதவரென்பதல்ல 'ஆண் எல்லாம் கற்பைவிட்டுத் தவறு செய்தால், அப்போது பெண்மையுங் கற்பழிந்திடாதோ' என்றார் பாரதியார்] பெண்டிர் ஒழுக்கத்தினிழுக்கின அந்த இழுக்கம் சந்திரனிடத்துக் களங்கம் போன்று பலர்க்கும் அறியப்படுமாறு விதித்த இறைவன அவ் ஒழுக்கத்தை நின்றும் காத்துக் கொள்ளும் உள்ளப் பாங்கையும் அவர்க்குச் சிறப்பாக்கினன் ஆகலின் அது துணையாக நங்கையர் தம்மாற் போற்றப் படுவன அனைத்தினுங் கற்பையே விழுமிதாகக் கொண்டு போற்றிக் கட்டுப்பாடுடையர்.

—(வரும்)

மெலிந்து
சோர்வுற்று
பலமிழந்து
ஊக்கமற்று
இருக்கும்
சகலருக்கும்
ஓர்விசேஷச்
செய்தி
ஜீவாதார உலோக சத்துக்களடங்கிய இந்தச்சிறந்த சாதனம் உங்களுக்குப்புதிய ஆரோக்கியமும் ஊக்கமும் பலமும் அளிக்கும்
பழனி சி. எம். சாமி அசல் தங்கபஸ்பத்தை இன்று முதலே சாப்பிட்டு வாருங்கள். உஷ்ணம், மேகம், கடுப்பு, மூலம், நீர்சுறுக்கு, வாதம், சொய்வு, க்ஷயம், குன்மம் இவைபோன்ற ஏனைய எல்லா நோய்களும் நீங்கிவிடும். கண்டிப்பாகம் பலனடைவீர்கள். தேகம் பூராவும் புது ரத்தம் பாயும். பசி ருசியுண்டாகும். நரம்புகள் வலுவடையும். கண்கள் பிரகாசமடையும். நீங்கள் வாலிப பலமும் தேக திடகாத்திரமும் அடைவீர்கள்.
24 நாள் பஸ்பம் விலை ரூபா 10
தலைமை ஆபீஸ்:- மலையப்பசாமி வைத்தியசாலை பழனி S I
கிளை ஆபீஸ்:- மலையப்பசாமி வைத்தியசாலை வண்ணார்பண்ணை கதிரேசன் கோவிலடி யாழ்ப்பாணம்
Y221 31-3.41—30.3.42

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna, at their Press, the Saiva PrakasaPress Vannarponnai, Jaffna, on Thursday October 30th 1941.